REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 327 ஐப்பசி 7 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 23 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொரோனா காவு 14

கொழும்பு, ஒக்.23
கொரோனாத் தொற்றால் நாட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது. 18

# மூன்றிலிரண்டுடன் நிறைவேறியது ‘20’

## 156 பேர் ஆதரவு
## 65 பேர் எதிர்ப்பு
### மைத்திரி, விஜயதாஸ புறக்கணிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 23

“இலங்கையின் ஜனநாயகத்துக்குச் சாவு மணியடிக்கும் சட்ட வரைவு” என புத்திஜீவிகளால் விமர்சிக்கப்பட்டு வந்த அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் நேற்று மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. 18



முச்சந்தி முரளி

“அவைக்கு இப்பிடி வேலி பாயுறதும், பதவிச் சுகம் தேடுறதும் ரத்தத்தில ஊறினது கண்டியளோ”

## எட்டுப் பேரின் 'பல்டி'யே '20' நிறைவேறக் காரணம்

கொழும்பு, ஒக்.23
பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச 18





## அரசு பக்கம் தாவிய முஸ்லிம் எம்.பிக்கள்

கமுக்கமாக இருந்த ஹக்கீம், ரிஷாத்

கொழும்பு, ஒக்.23
ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 18



நாடாளுமன்றில் நேற்று எதிரணியினர் 20க்கு எதிராகக் குண்டு துளைத்தது போன்ற ஆடை அணிந்து வந்து எதிர்ப்பை வெளிக்காட்டினர்.(எ)

## மனோ கட்சி எம்.பியும் எம்பிக் குதித்தார்!

கொழும்பு, ஒக்.23
மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த குமார் “20”க்கு ஆதரவாக வாக்க 18

## கிணற்றில் விழுந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23
கிணற்றில் இருந்து மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய 18

## குளவி கொட்டி விவசாயி உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஒக்.23
முல்லைத்தீவு விசுவமடு புத்தடிப்பகுதியில் குளவி கொட்டியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். 18

## நேற்றும் கொரோனா 309

விரிவு 3இல்

## வாள்களுடன் வீடு புகுந்து வன்முறைக் குழு தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக்.23
மல்லாகம், நீலியம்பனையில் வன்முறைக் கும்பல் ஒன்று வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளது. அதில் பெண் உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று 18

## 82 கிலோ கஞ்சாவுடன் பரு. கடலில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.23
இந்தியாவில் இருந்து கடத்திவரப்பட்டிருக்க 18

## பட்டப்பகலில் வீட்டில் திருட்டு: தாய் முறைப்பாடு மகன் சிக்கினார்!

கொழும்பு, ஒக்.23
நெல்லியடி, முடக்காடு பகுதியில் ஆள்கள் இல் 18

அமோக வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க.

ஒக்ரோபர் 25 முதல்

உங்கள் அபிமான சஞ்சீவி

இனி வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில்...

விலை:
ஞாயிறு - ரூ.40
ஏனைய நாள்கள் - ரூ.30



DFCC வங்கியின் 65 ஆம் வருட கொண்டாட்டத்தில் நீங்களும் இணையுங்கள்

65 YEARS

DFCC வங்கியின் 65 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களாகிய உங்கள் அனைவருக்கும் விசேட வெகுமதிகள்.

| | |
|---|---|
| பண வைப்புகளுக்குப் பரிசுகள் | • ரூபா.10,000 அல்லது அதற்கு மேற்பட்ட வைப்புகளுக்கு DFCC ஜூனியர் சிறுவர் சேமிப்புக் கணக்குள்ள பிள்ளைகளுக்கு பெறுமதி மிக்க பாடசாலைப் புத்தகப் பை மற்றும் தண்ணீர் போத்தல் |
| கிரடிட் காட்களுக்கு விசேட தள்ளுபடி | • 50 க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களில் 65% வரை விலைத் தள்ளுபடி<br>• புதிய DFCC கிரடிட் காட்களுக்கு இணைவுக் கட்டணம் மற்றும் முதலாம் ஆண்டுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது |
| கடன் பெறும்போது நிவாரணம் | • தனிப்பட்ட கடன், லீசிங் மற்றும் வீடுக் கடன்களுக்கு 65% செயற்பாட்டுக் கட்டணத் தள்ளுபடி |

இவ் வெகுமதி ஒக்டோபர் 31 வரை மட்டுமே

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# நடமாட்டங்களைக் குறைத்து கொரோனாவை விரட்டுங்கள்

யாழ்.வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 23

**பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அநாவசியமற்ற நடமாட்டங்களைக் குறைப்பதன் மூலமாக யாழ்ப்பாணத்தில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று யாழ். வணிகர் கழகத்தினர் அறிவுறுத்துகின்றனர்.**

யாழ். வணிகர் கழகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வணிகர் கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் கொரோனா பரவல் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் அவ்வாறான அபாயநிலை இன்னும் ஏற்படவில்லை. எனினும், யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் கொரோனாத் தொற்று தொடர்பில் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடும்போது யாழ்ப்பாண மாவட்டம் பாதுகாப்பான மாவட்டமாகக் காணப்படுகின்றது. எனினும், அந்த நிலையை தொடர்ச்சியாகப் பேணுவதற்கு யாழ்ப்பாண மாவட்ட மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

குறிப்பாக அநாவசியமற்ற முறையில் வீடுகளை விட்டு வெளியில் நடமாடுவதைத் தவிர்த்து வீடுகளில் இருப்பதன் மூலம் தொற்றுப் பரவாமல் தடுக்கலாம். அதேபோல் வெளி மாவட்டங்களுக்கான பயணங்களையும் இயன்றளவு குறைத்து அத்தியாவசியமான தேவைகளுக்கு மட்டும் வெளிமாவட்ட பயணங்களை மேற் கொள்வதன் மூலம் கொரோனாத் தொற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

இவைமட்டுமன்றி, வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தினர் விடுத்துள்ள சுகாதார நடைமுறைகள் தொடர்பான சுற்றறிக்கைகளையும் பின்பற்றுங்கள்.

தற்போது முகக்கவசங்கள் மிகவும் குறைந்த விலையில் கொள்வனவு செய்யமுடியும்.

பொதுமக்கள் முகக்கவசங்களை கட்டாயமாக அணிதல் வேண்டும். என்றார். (த-111)

# 2 மோட்டர்கள் திருட்டு; மூவர் கைதாகிப் பிணை

சாவகச்சேரி, ஒக். 23

சாவகச்சேரி மண்டுவில் பத்திரகாளி அம்பாள் கோவிலில் திருடப்பட்ட இரு நீரிறைக்கும் மோட்டர்களில் ஒன்றை சாவகச்சேரி பொலிஸார் மீட்டனர். அதனைத் திருடினரென்ற குற்றச்சாட்டில் இருவரும் அதனை. விலைக்கு வாங்கினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோவில் கிணற்றுக்கு அருகில் பொருத்தப்பட்டிருந்த நீரிறைக்கும் மின் மோட்டர்கள் கடந்த மாதம் இனந்தெரியாதோரால் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பாக கோவில் நிர்வாகத்தினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அதே பகுதியைச் சேர்ந்த இருவரை மீசாலை ஐயா கடையடியில் பொலிஸார் கைதுசெய்திருந்தனர். அந்த இருவரும் பொலிஸாரைக்கண்டு ஓடியுள்ளனர். அவர்களைத் துரத்திப்பிடித்து விசாரித்தபோதே மோட்டர்கள் திருடியமையைக் கூறினர். அவற்றை விற்பனைசெய்த இடங்களையும் கூறியுள்ளனர். அதன்படி வாங்கியவர்களில் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் மோட்டரை மீட்டதுடன் அதை விலைக்கு வாங்கியவரையும் கைதுசெய்தனர்.

விசாரணையின் பின்னர் பொலிஸார் மூவரையும் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர். ஆரம்ப விசாரணையின் பின்னர் மோட்டர் திருடினரென்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட இருவரையும் தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பிணையிலும் விலைக்கு வாங்கினார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவரை ஓர் இலட்சம் ரூபா பிணையிலும் விடுவித்த நீதிமன்று, வழக்கை ஒத்திவைத்தது. (த-9)

# இரண்டு மீனவர்கள் இன்னும் மீளவில்லை!

முல்லைத்தீவு, ஒக். 23

முல்லைத்தீவு மணல்குடியிருப்பு பகுதியிலிருந்து கடந்த 19ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற திருகோணமலை ஜமாலிய வீதியைச் சேர்ந்த ஆலியார் முகமட் சலீம் (வயது 56), முகமட் ரில்வான் (வயது 35) ஆகியோர் இதுவரையில் கரைதிரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 19 கடற்றொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் சுமார் 50 கடல் மைல் தொலைவுக்கு அப்பால்சென்று அவர்களைத் தேடியும் கண்டுபிடிக்காத நிலையில் கரை திரும்பியுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் திருகோணமலை மாவட்ட செயலர் மற்றும் இடர் முகாமைத்துவ நிலையத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-19)

# கோப்பாய் தனிமைப்படுத்தலில் மூன்று பேருக்கு திடீர் சுகவீனம்


யாழ்ப்பாணம், ஒக். 23

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் 3 பேர் திடீர் சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களில் 3 பேருக்கே திடீரென சுகவீனம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-20)

# முறிகண்டி பிள்ளையார் கோவில் வளாகத்தில் வாகனங்களுக்கு தடை



கிளிநொச்சி, ஒக். 23

முறிகண்டி பிள்ளையார் கோவில் வளாகத்துக்குள் வாகனங்கள் உட்செல்வதற்தற்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் தற்காலிகமாக தடை விதித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொரோனா சமூகப் பரவலாக தொற்றும் என்ற அச்சம் எழுந்துள்ள நிலையில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றும் விதத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதன்படி முறிகண்டி பிள்ளையார் கோவிலுக்கு வருவோர் கோவில் வளாகத்துக்கு வெளியில் வாகனங்களை நிறுத்திவிட்டு சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கோவிலுக்கு வரவேண்டும்.

முறிகண்டி வர்த்தகர்களும் இது பற்றிக் கலந்துரையாடி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-ரி1)

# திருமலை செயலராக சமன் தர்சன நியமனம்

திருகோணமலை, ஒக். 23

திருகோணமலை மாவட்டச் செயலராக சமன் தர்சன பாண்டிகோரள நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 26ஆம் திகதி அவர் தனது கடமைகளை அவர் பொறுப்பேற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்த இவர் 2013 செப்ரெம்பர் 3 ஆம் திகதி தொடக்கம் தென் மாகாண முதலமைச்சரின் செயலாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டச் செயலராகக் கடமையாற்றிய ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன 30 வருடங்கள் அரச சேவையின் பின்னர் நேற்று ஓய்வுபெற்றார்.

அவருக்கு மாவட்ட செயலகத்தில் பிரியாவிடை நடைபெற்றது.

இவர் கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி தொடக்கம் திருகோணமலை மாவட்ட செயலராகக் கடமையாற்றினார். (த)

*20 நிறைவேறியதற்கும்*

# வவுனியாவில் வெடி கொளுத்தல்

வவுனியா, ஒக். 23

20 ஆவது திருத்தச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேறியதும் வவுனியாவில் வெடிகொழுத்தப்பட்டது.

இரவு சுமார் 8 மணியளவில் வவுனியா கண்டி வீதியில் பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்கள் வெடி கொளுத்தி இனிப்புகள் வழங்கி வெற்றிக்கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைத் தலைவர் வசந்த, மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் ஆதரவாளர்கள் இதில் ஈடுபட்டிருந்தனர். (த-18)

# விவரங்கள் இல்லாத முகப்பூச்சு வேண்டாம்

*யாழ்., சாவகச்சேரியில் விழிப்புணர்வு*

யாழ்ப்பாணம், ஒக். 23

இறக்குமதி விவ்ரமில்லாத முகப்பூச்சுக்களை (கிறீம்) விற்பனை செய்வதனைத் தடை செய்யும் நோக்கில் வர்த்தக நிலையங்களுக்கு விஷேட விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பதிகாரியும் வடக்கு மாகாண பதில் உதவிப் பணிப்பாளருமான அப்துல் ஜஃபர் ஸாதிக் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மற்றும் சாவகச்சேரி பகுதிகளில் 87 வர்த்தக நிலையங்களுக்கு இவ்வாறு விஷேட விழிப்புணர்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-20)

# '20' நிறைவேறியதை காட்டிலும் எம்.பிக்கள் துரோகம் அதிக வலி!

## ஈ.சரவணபவன் ஆதங்கம்

**"எமது நாட்டின் தலையெழுத்தை மாற்றி, இருண்ட யுகத்துக்குள் தள்ளியுள்ள 20 ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டதை விடவும், அந்தத் திருத்தம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தோடு நிறைவேற, மக்களின் முதுகில் குத்தி கட்சி தாவிய எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்த துரோகமே அதிகமாக வலியைத் தருகின்றது." இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சி முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன்.**

அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது ஒக்ரோபர் 22 இலங்கையின் வரலாற்றில் ஒரு கறுப்பு நாளாக மாறியுள்ளது. தனிப்பட்ட ஒருவரின் கைகளில் ஒட்டுமொத்த அதிகாரங்களையும் கொடுத்து , ஜனநாயக ரீதியில் ஒரு சர்வாதிகாரியை உருவாக்கும் 20 ஆவது திருத்தம் நாடாளுமன்றில் 91 மேலதிக வாக்குகளால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நேற்று நிறைவேறியுள்ளது. ஜனநாயகத்தின் பேரைப் பயன்படுத்தி சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தும் ராஜபக்சக்களின் சதியை திட்டமிட்டபடி நிறைவேற்றியுள்ளனர். இதன் விளைவை ஒட்டுமொத்த இலங்கையர்களும், எதிர்காலம் முழுதும் அனுபவிக்க வேண்டிய துயரமான, இருண்ட யுகம் தோன்றியுள்ளது.

இந்தத் திருத்தம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற, எதிர்க்கட்சி வரிசையில் இருந்து முதுகில் குத்திவிட்டு கட்சி தாவிய எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களே முக்கியமான காரணம். அவர்களில் 6 பேர் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள். இவர்களுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரவிந்த குமார் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் டயானா ஆகிய எட்டுப்பேரே இந்தத் துரோகத்தைப் புரிந்து நாட்டில் சர்வாதிகார ஆட்சி மல்ர துணைபோயுள்ளனர். 20 ஆவது திருத்தம் நிறைவேறிவிட்டதே என்ற துயரை விடவும், இந்த எட்டுப் பேரும் செய்த துரோகமே இன்னும் அதிக வலியை மக்களிடம் உண்டாக்கியுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதிக்குப் பின்னர் முஸ்லிம் மக்களை ஈவிரக்கம் இல்லாமல், ஐந்தறிவு ஜந்துக்கள் போல நடத்துவதற்கும், கலவரங்களைத் தூண்டிவிட்டு இழப்புக்களை ஏற்படுத்துவதற்கும் சூத்திரதாரிகளான ராஜபக்சக்களுக்கு , அதே முஸ்லிம் இனத்தின் பிரதிநிதிகள் தோள் கொடுக்க எப்படி முடிந்தது?. அவ்வளவு எளிதில் தங்கள் இனத்துக்கு ராஜபக்சக்கள் இழைத்த கொடுமைகளை மறந்துவிட்டு, சுயநலத்துக்காக ஓடிப்போய் ஒட்டிக்கொள்ளபவர்களை முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் என அழைக்க முடியுமா?

அதேபோன்றுதான் அரவிந்தகுமாரும் , 20 ஆம் திருத்தத்துக்காக ராஜபக்சக்களுக்கு அடிமையானதன் மூலம் தனக்கு வாக்களித்த மலையக மக்களுக்கு துரோகமிழைத்துள்ளார். தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்னமும் 1000 ரூபா சம்பளத்தை கொடுக்க மனமில்லாமல் நாடகமாடும் அரசுக்கு ஆதரவு தெரிவித்ததன் மூலம் தன்மீது பெரும் களங்கத்தை உண்டுபண்ணியுள்ளார்.

இலங்கையின் எதிர்காலத்தைப் படுகுழிக்குள் தள்ளியுள்ள 20 ஆம் திருத்தத்தை நிறைவேற்ற துணைபோனதன் மூலம் இந்த எட்டுப் பேரும் செய்த துரோகத்தை மக்கள் மன்னித்தாலும், வரலாறும், காலமும் அவர்களை மன்னிக்கப்போவதில்லைஎன்றுள்ளது. (ஏ)



முல்லை மீனவர்களுக்கு

# பேலியகொட மீன்சந்தையுடன் தொடர்பா?

முல்லைத்தீவு, ஒக். 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கரை பகுதியில் உள்ள மீன் ஏற்றுமதி வியாபாரிகளின் கூலர் வாகனங்கள் அண்மைக்காலமாக பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று வந்துள்ளன.

இதனால் அவர்களிடம் பி.சி.ஆர் சோதனைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பேலியகொட மீன்சந்தையில் பணியாற்றும் 49 பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்தே மேற்படி சந்தையுடன் வர்த்தகத் தொடர்பைப் பேணிய முல்லைத்தீவு மீன வர்கள் தொடர்பில் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம-19)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், ராச வீதியில் றோட்டுடன் 9 பரப்பு சீர்செய்த காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.

தொடர்பு
076 888 4625, 077 623 4204

# நேற்று மட்டும் நாட்டில் 309 பேருக்கு கொரோனா

## '6,000' த்தைத்தாண்டியது மொத்தப் பாதிப்பு

கொழும்பு, ஒக்.23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று மட்டும் 309 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பேலியகொட மீன் சந்தைப் பகுதியில் 188 பேருக்கும், தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் இருந்த 2 பேருக்கும், கட்டுநாயக்கவில் 22 பேருக்கும், மினுவாங்கொட கொரோனாத் தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய 97 பேருக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 287ஆக உயர்வடைந்துள்ளது. தற்போது 2,712 தொற்றாளர்கள் 23 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 3 ஆயிரத்து 561 பேர் குணமடைந்தும் 14 பேர் உயிரிழந்தும் உள்ளனர். (எ-22)

# முல்லையில் அச்சநிலைமை!

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள தென்பகுதிப் பணியாளர்களால் அந்தப் பகுதி மக்கள் அச்சமான சூழலில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. நெடுங்கேணியில் வீதி அபிவிருத்திப் பணியில் ஈடுபட்ட மூவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே மக்கள் இவ்வாறு அச்சம் வெளியிட்டுள்ளனர். (ம-இ)

# சமூகத் தொற்று அபாயம்

## சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் சமூகப்பரவல் என்ற அபாய கட்டத்துக்கு வந்துவிட்டது என்று பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுதல் ரோஹண நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: "திவுலப்பிட்டிய பகுதியில் கடந்த 2ஆம் திகதியே கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

அதன்பின்னர் நாட்டில் நேற்று முந்தினம் இரவுவரை குளியாப்பிட்டிய, கட்டுநாயக்க வர்த்தக வலயம், மத்துகம மற்றும் பேலியகொட மீன் சந்தை என நான்கு உப கொத்தணி பரவல்கள் ஏற்பட்டுள்ளன. எதிர்காலத்திலும் இவ்வாறான உப கொத்தணிப் பரவல்கள் ஏற்படக்கூடிய அபாயம் அதிகமாகவே இருக்கின்றது.

சமூகப் பரவல் என்ற அபாய கட்டத்திலேயே நாம் இருக்கின்றோம். பேலியகொட மீன் சந்தையில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து நாம் சமூகத்தொற்றை நோக்கி பயணிக்கின்றோம் என்பதற்கான காரணங்கள் வெளிவருகின்றன.

2ஆவது அலைக்கான ஆரம்பப்புள்ளி இன்னும் கண்டறியப்படவில்லை. பேலியகொட மீன் சந்தையில் எதேச்சையாகவே பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

அதன்போதே பலருக்கு வைரஸ் தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. ஏனைய பகுதிகளிலும் இவ்வாறு இருக்கலாம். என்றார். (ம-44)

பிராந்திய செய்தியாளர்கள்

தேவை



வவுனியா

துடிப்பும், ஆர்வமும் கொண்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
E-Mail:
editor@uthayan.com

மினுவாங்கொட தொற்றுப்பரவல்:

# துணைக்கொத்தணிகள் வெளிப்படவாய்ப்பு அதிகம்

எச்சரிக்கிறது மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம்

**கொழும்பு, ஒக்.23**

**மினுவாங்கொட கொத்தணியிலிருந்து துணைக்கொத்தணிகள் வெளிவருவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன என அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் எச்சரித்துள்ளது. அத்துடன் இது கொரோனாத் தொற்றின் சமூகப் பரவலுக்கு வழிவகுக்கும் என்றும் அந்த சம்மேளனம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சம்மேளனத்தின் அதிகாரி வைத்திய கலாநிதி ஹரித்த அலுத்கே தெரிவித்துள்ளதாவது.

தற்போதைய நிலைமையை பொறுத்தவரையில் தினசரி கொவிட் அச்சம் தீவிரமாகி வருகிறது.

கொரோனா வைரஸ் ஒரு சமூக பரவலுக்கு வழிவகுக்குமா அல்லது ஏற்கனவே அது சமூக மட்டத்துக்கு பரவியிருக்கிறதா என்பதை அடையாளம் காண்பதற்கு, நிலைமையை கண்காணிக்குமாறு ஏற்கனவே தொற்றுநோயியல் பிரிவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமை சமூகப் பரவலுக்கு வழிவகுத்தால், அதைக் கட்டுப்படுத்துவது கடினம். எனவே நிலைமையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நாட்டில் தற்போது பாதிக்கப்பட்டவர்களின் தொடர்புகளைக் கண்டறியும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் பல்வேறு பகுதிகளிலிருந்து துணைக் கொத்தணிகள் தோன்றினால் தொடர்புத் தடமறிதல் சாத்தியமில்லை. அதைத் தடுக்க முழுமையான முடக்கத்துக்கே செல்ல வேண்டியேற்படும் என அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## கருவாடு வர்த்தக சங்கத்தின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

கொழும்பு, ஒக்.23

கொரோனாவிலிருந்து பாதுகாப்பு பெறும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புறக்கோட்டை கருவாடு வர்த்தகர் சங்கம் நேற்று முதல் கடையடைப்பில் ஈடுபடவுள்ளது என அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அச் சங்கத்தின் தலைவர் பியோனஸ்ட் பெர்னாண்டோ தெரிவித்துள்ளதாவது:


எங்கள் உறுப்பினர்களில் சிலரை சுய தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

அரசாங்கத்தை ஆதரிப்பதும், எங்கள் குடும்பத்தினரையும் ஊழியர்களையும் நினைவில் கொள்வதும் எம் கடமையாகும். அவர்கள் உங்களை அழைக்கும்போது பி.சி.ஆர். சோதனைக்குச் செல்லுங்கள். இன்று (நேற்று) முதல் ஞாயிற்றுக்கிழமை வரை உங்கள் வணிகத்தை மூடிவிட்டு, உங்கள் வீட்டில் சுயமாகத் தனிமைப் படுத்திக்கொள்ளுமாறு சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நாங்கள் பரிந்துரைக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## அத்தியாவசிய தேவையிருந்தால் மட்டும் ரயிலில் பயணியுங்கள் !

பொதுமக்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக்.23



அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் ரயில்களைப் பயன்படுத்துமாறு ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. நாட்டில் கொரோனாப் பரவல் தீவிரம் அடைந்துள்ளமையால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. ரயிலில் பயணிப்பவர்கள் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை உரிய முறையில் பின்பற்ற வேண்டும் என பிரதான பாதுகாப்பு அதிகாரி அனுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளமையால் நகரங்களுக்கு இடையிலான சில ரயில் சேவைகள் தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## ஊரடங்கு 'பாஸாக' கடமைக் கடிதங்கள்

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு

கம்பஹா, ஒக்.23



ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள இடங்களில் உயர்தரப் பரீட்சை நடவடிக்கைகளை கண்காணிக்கும் மேற்பார்வையாளர் மற்றும் இந்த பணியில் ஈடுபட்டுள்ள ஏனைய அரச ஊழியர்கள் தங்களது கடமைக் கடிதத்தை ஊரடங்கு அனுமதியாகப் பயன்படுத்த முடியும். இதனை பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்டத்துக்குள் எந்த வாகனத்தையும் நிறுத்த அனுமதி வழங்கப்படமாட்டாது.

எனினும் இந்த ஊரடங்கினால் மகப்பேறு பெண்கள் மற்றும் உயர்தர பரீட்சை எழுதும் பரீட்சார்த்திகள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

கம்பஹா மாவட்டத்துக்குள் நீர், மின்சாரம், தொலைத்தொடர்பு, விமான நிலைய சேவைகள் மற்றும் ஊடகங்கள் போன்ற அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படமாட்டாது. எனினும் ஊரடங்கு உத்தரவுகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## போதை மாத்திரைகளை பெற வந்த பெண் கைது

கொழும்பு, ஒக். 23



பிரான்ஸிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட ஒரு தொகை போதைமாத்திரைகளுடன் தொடர்புடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

20 மில்லியன் ரூபா பெறுமதியான மெதம்படமைன் எனப்படும் ஒரு வகை போதைப்பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து, தபால் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்ததாகவும் இதனைப் பெற்றுக்கொள்ள வருகை தந்த பெண்ணொருவரே சுங்கத் திணைக்களத்தின் போதைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது. (ம-இ)

## பேலியகொட சந்தைக்குச் சென்ற நான்கு பொலிஸார் தனிமையில்

கொழும்பு, ஒக்.23

பேலியகொட மீன் சந்தைக்கு வருகை தந்த நான்கு பொலிஸ் அதிகாரிகளை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது. பேலியகொட சந்தையில் 46 வர்த்தகர்கள் உட்பட 49 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேநேரம், மேல் மாகாண சிறப்பு புலனாய்வு பிரிவில் இணைக்கப்பட்ட இரண்டு அதிகாரிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## மீன்களில் கொரோனா எவ்வளவு காலம் வாழும்?

கலாநிதி சுதத் சமரவீர விளக்கம்

கொழும்பு, ஒக்.23

மீன்களின் உடலில் கொரோனா வைரஸ் எவ்வளவு காலம் உயிருடன் வாழும் என்பது தொடர்பில் உறுதியாக கூற முடியாது என தேசிய தொற்று நோயியல் பிரிவின் பிரதம மருத்துவர், கலாநிதி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் ஏதேனும் உடலில் குறிப்பிடத்தக்க காலம் வாழும் தன்மையை கொண்டது. வுஹானில் மீன் விற்பனை நிலையம் ஒன்றில் இருந்தே இந்த வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. உறுதியாக இதனைக் கூற முடியாவிடினும் மீன்களில் இருந்து இந்த வைரல் பரவி இருக்குமானால், மனிதர்களிடத்தில் எவ்வாறு அது வியாபித்தது என்பது தொடர்பில் கண்டறிய வேண்டும். மீன்களை உணவுக்காக எடுத்துக்கொள்வதால் எந்தப் பிரச்சினையும் இல்லை. முறையாக சுகாதார வழிமுறைகளை கைக்கொண்டால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

சமைப்பதற்கு மீன்களைத் தொட்ட பின்னர் நன்றாகக் கைகளை சவர்க்காரம் இட்டு கழுவ வேண்டும். இவ்வாறு செய்தால் மீன்களின் உடலில் வைரஸ் இருந்தாலும் பாதுகாப்பு பெறலாம். மீன்களை உணவாக உட்கொள்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## சஹ்ரானின் மனைவி ஆணைக்குழுவில் சாட்சியம்!

கொழும்பு, ஒக். 23

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில், தாக்குதல்தாரியான சஹ்ரானின் மனைவி நேற்று முதல்முறையாக முன்னிலையாகி சாட்சியம் வழங்கினார். 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல்கள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு தற்போது விசாரணை நடத்தி வருகின்றது. (ம-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வாய் மூடுவது நல்லது

இலங்கையில் கண்மூடித்திறப்பதற்கிடையில், மூவாயிரம் தொற்றாளர்களைக் கடந்து முதல் பலியையும் எடுத்திருக்கிறது கொரோனாவின் மூன்றாவது அலை. கொரோனாவின் முதலிரு அலைகளும் மூவாயிரம் பேருக்கு தொற்றுவதற்கு எடுத்த கால அளவோடு ஒப்பிடுகையில் இது மிக அபாயமான சமிக்ஞை. அத்தோடு முன்னைய கொரோனா வைரஸை விடவும் இப்போது பரவிக்கொண்டிருக்கும் வைரஸின் வீரியமும் அதிகம். கூடவே கொரோனாத் தொற்று ஏற்பட்டு அதிலிருந்து மீண்டாலும் கூட, மூன்று மாதங்களில் நோயெதிர்ப்பு சக்தியின் பலம் குன்றிவிடுவதால் இரண்டாம் முறையும் கொரோனாவில் சிக்கும் ஆபத்து இருக்கின்றது என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

இப்படி கொரோனா பற்றி கதிகலங்க வைக்கும் புதிய தகவல்கள் வெளியிடப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், அதனை இன்னும் அதிகப்படுத்துவது போல இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் கொரோனாத் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். குறிப்பாக மக்கள் அதிகளவில் கூடும் இடங்களான பேலியகொட மீன் சந்தை, கொட்டுவா சந்தை, தெகிவளை மத்திய வர்த்தக வளாகம் , களுபோவில வைத்தியசாலை என்று கொரோனா கால்பதித்த இடங்களின் பேரே அது எந்தளவுதூரம் சமூகப் பரவலாக மாறியிவிட்டது என்பதை உணர்த்துகின்றது. சுமார் 13 மாவட்டங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் இப்போது இனம் காணப்பட்டுள்ளனர். அந்த 13 மாவட்டங்களிலும் தனிமைப்படுத்தலில் இருந்தபோது தொற்றுக்குள்ளானவர்களைக் கண்டு பிடித்ததை விடவும், அவர்கள் சமூகத்தோடு இணைந்து வாழ்ந்துகொண்டிருந்த சமயத்திலே இனங்காணப்பட்டமையே அதிகம். ஆகவே என்னதான் சுகாதார அமைச்சர் கற்பூரத்தைக் கொளுத்தி சத்தியம் செய்தாலும்கூட, இலங்கையில் மிகமோசமான சமூகப் பரம்பலாக கொரோனா மாற்றமடைந்துவிட்டது என்பதே யதார்த்தம்.

அப்படியானால் எதற்காக அரசு தன்னுடைய அத்தனை ஆளணி, அம்புகள் மூலம் 'கொரோனா சமூகத் தொற்றாக இன்னும் மாறவில்லை' என்று சொல்லிக் கொண்டிருக்கிறது? காரணம், இந்தக் கொரோனா சந்தில் '20' என்ற சிந்து பாடும் யுக்திதான். மக்களின் கவனமெல்லாம் கொரோனாவின் பக்கமும், மாகதுந்துரே மதுஷின் கொலையின் பக்கமும், ரிஷாத்தின் கைது பற்றிய கதைகளின் பக்கமும் திரும்பியிருக்க, எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் குதிரைப்பேரம் பேசி, கட்சி தாவ வைத்து தங்கள் திட்டத்தை கனகச்சிதமாக முடிக்கவே இப்படி,'சமூகத் தொற்று இன்னும் ஏற்படவேயில்லை' என்று வாய்கூசாமல், மக்கள் நலனைக் கிஞ்சித்தும் கவனத்திற்கொள்ளாமல் பொய் சொல்கின்றது அரசு.

தொற்றாளர்களின் எண்ணிக்கை உயரும் வேகத்தையும், அவர்கள் இனங்காணப்படும் இடங்களையும் பார்க்கும் சிறுபிள்ளைக்குக்கூட, கொரோனா இலங்கையில் சமூகத் தொற்றாக உருவெடுத்து பலநாள்களாகி விட்டன என்ற உண்மை புலப்படும், கடந்த 9 நாள்களில் மட்டும் 1000 க்கும் அதிகமானோருக்கு கொரோனா தொற்றியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் நாட்டில் இருக்கக்கூடும் எனவும், போதிய பி.சி.ஆர் சோதனைகள் செய்யக்கூடிய வசதிகள் இன்மையாலேயே இப்படி பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது எனவும் சொல்லப்படுகின்றது. அதுவும் ஒரு வகையில் உண்மையே. இந்தியாவைப் போல நடமாடும் பி.சி.ஆர் சோதனை நிலையங்களை அமைத்து, சகலரையும் பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தினால், எண்ணிக்கை பத்தாயிரத்தை விடவும் அதிகமாக இருக்குமே தவிர குறையமாட்டாது. இப்படிப்பட்ட நிலையில் உண்மைத்தன்மையை மறைத்து, கொரோனாவால் இலங்கைக்கு எந்தவொரு பாதிப்புமில்லை என்று மீசையில் மண் ஒட்டாத கதையை அரசு சொல்வது பாரதூரமானது. ஏனெனில் உள்ளதைச் சொன்னால்தான் அதற்கேற்றபடி, மக்கள் தங்களைக் காத்துக்கொள்வர். அதைவிடுத்து இப்படி ஒளித்து மறைத்தால் 'கொரோனா சமூகத்தொற்றாக மாறவில்லை என்று அரசே சொல்லிவிட்டது" என்று சுகாதார நடைமுறைகளைத் தூக்கி எறிந்துவிட்டு, எல்லோரும் தம்மிஷ்டப்படி நடக்கத் தொடங்கிவிடுவார்கள். அது கொரோனா இன்னமும் சமூகப் பரம்பலாக விரிவடையும் வாசலைப் பலமாகத் திறக்குமே தவிர, ஒருபோதும் கொரோனாவைத் தடுக்கவோ, ஒழிக்கவோ உதவாது.

20 ஆவது திருத்தத்தை நீங்கள் கொண்டுவாருங்கள், இல்லையேல் குப்பைக் கூடைக்குள் கடாசுங்கள், அதைப்பற்றியெல்லாம் மக்கள் இப்போது அக்கறைப்படும் நிலையில் இல்லை. ஆனால் உங்கள் அரசியல் ஆதாயங்களுக்காக மக்களைப் பலிகொடுக்கும் வகையிலான பொய்யான தகவல்களை வெளிவிடாமல் அரசு வாயை மூடிக்கொண்டு இருந்தாலே, மக்கள் தாமாகவே நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து சரியான முடிவை எடுத்து, கொரோனாவைத் தடுப்பார்கள்.

# அலைபேசியில் பாலியல் தொல்லை: உதவிப் பணிப்பாளர் பிணையில்!

யாழ்ப்பாணம், ஒக். 23

**வடமாகாண மும்மொழிக் கற்கைகள் நிலையத்தில் குடும்பப் பெண் ஒருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட உதவிக் கல்விப் பணிப்பாளரை பிணையில் விடுவித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.**

அரசியல் தலையீடுகள் காரணமாக குடும்பப் பெண்ணின் முறைப்பாட்டை யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏற்க மறுத்த நிலையில், பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

கிளிநொச்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய அவர், வடமாகாண மும்மொழிக் கற்கை நிலையத்துக்கும் இணைக்கப்பட்டார். மும்மொழிக் கற்கை நிலையத்தில் பணியாற்றும் குடும்பப் பெண் ஒருவருக்கு அவர் அலைபேசி ஊடாக பாலியல் தொல்லை கொடுத்தார் என்று குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பில் குடும்பப் பெண்ணின் முறைப்பாட்டை ஏற்க யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மறுத்த நிலையில், பொலிஸ் இணையத்தளம் ஊடாக பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டை ஆராய்ந்த பதில் பொலிஸ்மா அதிபர், பாதிக்கப்பட்ட பெண்ணின் முறைப்பாட்டை ஏற்குமாறு யாழ்ப்பாணம் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகருக்குப் பணிக்கப்பட்ட நிலையில் அப் பெண்ணின் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாக்குமூலமும் பெறப்பட்டது.

அதனடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

யாழ்ப்பாணம் பிராந்திய பொலிஸ் பிரிவின் பெண் பொலிஸ் அத்தியட்சகரால் சந்தேகநபருக்கு எதிராக இலங்கை தண்டனைச் சட்டக் கோவை 345ஆம் பிரிவின் கீழ் நபர் ஒருவருக்கு செயலாலோ அல்லது சொற்களாலோ பாலியல் ரீதியான தொல்லை கொடுத்தார் என்று குறிப்பிட்டு 'பி' அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ், பிணை விண்ணப்பம் செய்து சமர்ப்பணத்தை முன்வைத்தார். பிணை விண்ணப்பத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல், சந்தேக நபரை 2 லட்சம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதியளித்து உத்தரவிட்டதுடன் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. வடக்கு கல்விச் செயலணியின் உறுப்பினராக இவரை அமைச்சர் நியமித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-26)

## தண்ணீரை விரயமாக்காதீர்

கிளிநொச்சி,ஒக்.23

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரின் தண்ணீர் பெறப்படும் வளங்களில் அதிகளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதனால் தண்ணீரைச் சுத்திகரிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

சுத்திகரிக்கப்பட்ட தண்ணீருக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுவதால், பாவனையாளர்கள் தண்ணீரை வீண்விரயம் செய்யாது மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இன்று முதல் இரண்டு நாள்களுக்கு ஒரு தடவை என்ற சுழற்சி முறையில் தண்ணீர் விநியோகம் இடம்பெறும். எதிர்பாராதவிதமாக முன்னறிவித்தலின்றி தண்ணீர் விநியோகத்தடை ஏற்பட சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

பாவனையாளர்கள் தண்ணீரைக் கொதிக்க வைத்து பாவனைக்கு உட்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (க-இ)

## லைசன்ஸ் காலம் நீடிப்பு




கொழும்பு,ஒக்.23

காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்துவதற்கான கால எல்லை 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின், பயன்படுத்தும் கால எல்லையே நீடிக்கப்பட்டு உள்ளது. (க-இ)

# விவசாயம் மேற்கொள்ள உதவுக! அக்கராயன் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக். 23

கிளிநொச்சி அக்கராயன் மக்கள் தாம் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வந்த பகுதிகளில் தொடர்ந்தும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கரைச்சி பிரதேச செயலரிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் கரைச்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதன்போது குறித்த மக்களின் பிரதிநிதிகளாக மூவர் கரைச்சி பிரதேச செயலாளரைச் சந்தித்து தமது பிரச்சினைகளை முன்வைத்ததுடன், அவரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

குறித்த பகுதியில் 40 ஆண்டுகளுக்கு மேலாக நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றோம். தற்போது சிலர், பிரதேச செயலகத்தின் அனுமதிக் கடிதத்துடன் நாம் காலபோகச் செய்கை மேற்கொண்டுள்ள பகுதி அடங்கலாக கனரக வாகனங்கள் மூலம் துப்புரவு செய்கின்றனர். இதனால் தாம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே இது தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை முன்வைத்தனர். இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்று பிரதேச செயலர் உறுதி வழங்கினார். (ம-6)

# 13 மாவட்டங்களுக்கு பரவியது கொரோனா

## தொற்று நோயியல் நிபுணர் அறிவிப்பு



**கொழும்பு,ஒக்.23**

**தற்போது 13 மாவட்டங்களுக்கு கொரோனாத் தொற்று வேகமாக பரவியுள்ளது. இந்த நிலைமை இன்னும் அதிகரிக்க லாம் என்று தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர எச்சரித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: கொரோனா தொற்றுக்குள்ளான நோயாளர்கள் சிலர் பேலியகொட மீன் சந்தைக்கு வந்து சென்றனர் என்ற அடிப்படையில் பலருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொற்று பரவல் ஏற்பட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 49 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இடத்துக்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்து மீன் வர்த்தகர்கள் மீன்களைக் கொண்டு வருகின்றனர். அதேபோல் மீன்களைப் பெற்றுச் சென்று விற்பனை செய்கின்றனர். இதன் காரணமாக நோய்த்தொற்றுப் பரவியிருந்தால் அது பல மாவட்டங்களில் பரவி இருக்கக்கூடும்.

மினுவாங்கொட தொற்றாளர்கள் அதிகமாக கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். எனினும் குருநாகல், புத்தளம், கேகாலை, கண்டி, காலி, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், வவுனியா, அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் மொனராகலை ஆகிய 13 மாவட்டங்களிலும் கூட நோய்த் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மீன் சந்தை நோயாளர்களின் பரவல் காரணமாக இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக் கூடும் - என்றார். (க-இ)

# போத்தல் தண்ணீரால் பொலிஸாருக்கு வழக்கு

கொழும்பு,ஒக்.23

கடமையிலிருந்தபோது, தண்ணீர் பகிர்ந்து பருகிய பொலிஸ் அதிகாரியொருவருக்கும், சிவில் பாதுகாப்புப் பெண் அதிகாரியொருவருக்கும் எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


பாணந்துறை நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்புக் காவலரணில் கடமையிலிருந்த இருவருக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இருவருக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும். ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகள் இருவரும் ஒரு போத்தல் தண்ணீரைப் பகிர்ந்து அருந்தியமையாலேயே, இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# பி.சி.ஆர். பரிசோதனை ஏமாற்று நடவடிக்கை

## இலங்கை ஆய்வக சங்கம் தகவல்



கொழும்பு,ஒக்.23

கொரோனா வைரஸ் தொற்றை இனங்காணும் வகையில், இலங்கையில் நடத்தப்படும் பி.சி.ஆர். பரிசோதனை முற்று முழுதான ஏமாற்று நடவடிக்கை என்று இலங்கை ஆய்வக சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார். இலங்கையில் இந்தப் பரிசோதனை என்பது இன்று மாபியாவாக உருவெடுத்துவிட்டது. இதற்கு சுகாதார அமைச்சும் உடந்தை.

கொரோனா வைரஸ் தொற்றுச் சமூகத்தில் பரவிவிட்டது என்பதை அரசு கூற மறுக்கின்றது.

பி.சி.ஆர். பரிசோதனையை நடத்த ஒரு முறையான சூத்திரம் அரசுக்குக் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# கொரோனாப் பாதிப்பு முதியோருக்கு குறைவு

கொழும்பு,ஒக்.23



இலங்கைக்குள் கொரோனாவால் பாதிக்கப்படும் முதியோர் எண்ணிக்கை குறைந்தளவில் உள்ளது. இந்த நிலைமை மாறுமானால் தற்போதுள்ள இறப்பு எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் பேச்சாளர் மருத்துவ கலாநிதி ஜயருவன் பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனாவுக்கு எதிராக இன்னும் தடுப்பூசிகள் பயன்படுத்தப்படவில்லை.

பி.சி.ஆர் பரிசோதனைகள் மாத்திரமே கொரோனா வைரஸைக் கண்டுபிடிக்க வழியாக உள்ளது. அதனால் நாட்டில் கொரோனாவைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

கடந்த சில மாதங்களில் கொரோனா வைரஸ் தொடர்பில் பொதுமக்களின் அலட்சிப்போக்குக் காரணமாகவே இன்று வைரஸின் தாக்கம் அதிகமாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (க-இ)



இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின், வன்னிப் பிராந்திய ஒருங்கிணைப்புச் செயலாளராக பாலிந்த விக்ரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். (க-110)

# 60 பேர் குணமடைவு

கொழும்பு,ஒக்.23

நாட்டில் மேலும் 60 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மூவாயிரத்து 561 பேர் மீண்டுள்ளனர். இரண்டாயிரத்து 404 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 342 பேர் கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில் சிகிச்சை பெறுகின்றனர். (க-இ)

# ஊரடங்கு பகுதிகளுக்கு இணைப்பு அதிகாரிகள்

கொழும்பு,ஒக்.23

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள பகுதிகளில் மக்களின் பிரச்சினைகளை ஆராய, 4 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், இணைப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள் ளனர்.

கொழும்பு வடக்கு மற்றும் கம்பஹா பொலிஸ் வலயங்களுக்கு இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரால் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

களனி வலயத்துக்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எம்.கே.ஆர்.ஏ. குணரத்ன (0718 591605), கம்பஹா பொலிஸ் வலயத்துக்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சுசித குமார (0718591610), நீர்கொழும்பு பொலிஸ் வலயத்துக்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பாலித அமரதுங்க (0718591632) கொழும்பு பொலிஸ் வலயத்துக்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நிரஞ்சன் அபேவர்தன (0718 591574) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (க-இ)

# பாடசாலைகளுக்கு தலா 15,000 ரூபா

கொழும்பு,ஒக்.23

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை இடம்பெறும் பரீட்சை நிலையங்களின், சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அதற்கமைய, பாடசாலைகளில் உள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக, தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் வங்கிக் கணக்குகளில் இந்த நிதி வைப்பிலிடுவதுடன், இதன் ஊடாக பரீட்சை அனுவலக சபையினருக்குத் தேவையான சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

# மதுஷ் கொலை: விபரங்கள் புனைகதை

மாகந்துரே மதுஷின் கொலை தொடர்பான விபரங்கள் புனைகதை என்று அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சமிந்த அதுகோரள, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய தரப்பினருக்குக் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

மதுஷின் மனைவியின் ஆலோசனைக்கு அமைவாக அவர் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் இருந்த மதுஷை, கொழும்பு குற்றப் விசாரணைப் பிரிவுக்கு மாற்றியது சட்ட விரோதமானது. இது அவரது கொலைக்கான முன்ஏற்பாடு என்று சட்டத்தரணி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (க-இ)

## கடந்த மாதத்தில் மட்டும்

# யாழ். வர்த்தகர்களுக்கு எதிராக 116 வழக்குகள்

யாழ்ப்பாணம்,ஒக்.23

யாழ்ப்பாண மாவட்டத்தில் சட்டத்துக்கு மாறாக செயற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக கடந்த மாதம் மட்டும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் 116 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பதிகாரியும், வடக்கு மாகாண பதில் உதவிப் பணிப்பாளருமாகிய அப்துல் லத்தீப் ஜபர் ஸாதிக் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

காலாவதி மற்றும் விலைப்பட்டிய லின்மை, உத்தரவாதமின்மை, இறக்குமதி விவரமின்மை, எஸ்.எல்.எஸ். தரச்சான்றுதலின்மை, கட்டுப்பாட்டு விலையை மீறியமை போன்ற காரணங்களுக்காக இவ் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன.

இந்த 116 வழக்குகளில் 75 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 4 லட்சத்து 2 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்பட்டது.

இது தொடர்பில் தொடர்ச்சியாக தமது உத்தியோகத்தர்களினால் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்வோர் மற்றும் பொருள் பதுக்கலில் ஈடுபடுவோர் தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது - என்றார். (ஐ-111)



## குழாய்க் கிணறு அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு

வவுனியா, ஒக்.23

வவுனியா ஜேசுபுரம் பகுதியில் குழாய்க் கிணறு அமைக்கும் செயற்பாடு, பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா ஜேசுபுரம் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் அனுராதபுரத்திலிருந்து வருகை தந்தனர் எனத் தெரிவிக்கப்படும் நீர்ப் பாசனத் திணைக்கள ஊழியர்கள் குழாய்க் கிணறு அமைப்பதற்கான செயற்பாட்டை முன்னெடுக்கும் வகையில் இயந்திரங்கள் மற்றும் குழாய்களை நேற்றுமுன்தினம் கொண்டு வந்திருந்தனர். நேற்றைய தினம் குறித்த பகுதியில் குழாய்க் கிணறு அமைக்கும் பணியை செயற்படுத்த முனைந்தபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் அப் பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில் "ஏற்கனவே நிலத்தடி நீர் பற்றாக்குறையாக சென்றுகொண்டிருக்கும் நிலையில் இவ்வாறான பெரியளவிலான குழாய்களை அமைப்பதற்கு நாம் அனுமதி வழங்கமாட்டோம்" என்றனர்.

அத்துடன் குழாய்க் கிணறு அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவுக்கும் வகையில் "நீர் உறிஞ்சுவது நீரா?எம் உயிரா?,விவசாயிகளின் குருதியை உறிஞ்சாதே" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் பொதுமக்கள் இதன்போது ஏந்தியிருந்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த கூட்டமைப்பின் வவுனியா பிரதேச சபை உறுப்பினர்களான கார்த்தீபன், உத்தரியநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் இணைப்பாளர் அலெக்ஸ், ரெலோவின் முக்கியஸ்தர் நாகராஜன் ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடியதுடன் இதனை நிறுத்துவதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்திருந்தனர். (ஐ-110)

## பெரிய வெங்காயத்தின் விலை குறையவில்லை

### நுகர்வோர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்.குடாநாட்டில் போதியளவு பெரிய வெங்காயம் கொண்டுவரப்பட்டும், அவற்றின் விலை குறையவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நுகர்வோர் தெரிவித்ததாவது;

அரசாங்கம் பெரிய வெங்காயத்தின் விலையை நூறு ரூபாவாக விற்க வேண்டும் என்று நிர்ணயித்துள்ளது. அதன்படி வடக்குக்குப் போதியளவு வெங்காயம் வரவழைக்கப்படுகிறது. எனினும் அவை இங்கு கிலோ 130 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன. சின்ன வெங்காயத்தின் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது. கடந்த வாரத்தில் கிலோ 160ரூபாவாக விற்கப்பட்ட சின்னவெங்காயம் கிலோ 200 ரூபாவாக அதிகரித்துள்ளது. கூடுதலான சின்ன வெங்காயம் தெற்குக்கு வியாபாரிகளால் எடுத்துச் செல்லப்படுவதால்தான் இந்த விலை அதிகரிப்பு என்றனர். (ஐ-17)



## வீதி விபத்து: ஒருவர் காயம்

கிளிநொச்சி, ஒக்.23

டிப்பர் வாகனமும்,சைக்கிளும் மோதியதில் சைக்கிளில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார்.இந்த விபத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெத்தலியாற்றுப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

புன்னைநீராவி கண்ணகி நகர் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரே காயமடைந்த நிலையில் தர்மபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கிச் சென்ற டிப்பர் வாகனம் அதே பகுதியை நோக்கிச் சென்ற சைக்கிளின் பின்புறமாக மோதித் தள்ளியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

விபத்து தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-113)

## வீடுகளில் வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்கள்

சாவகச்சேரி,ஒக்.23

கொரோனாத் தொற்றுக் காரணமாக தனியார் வகுப்புகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் தென்மராட்சி பகுதியில் சில ஆசிரியர்கள் தமது வீடுகளில் வைத்து வகுப்புகளை நடத்துகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொரோனா காலத்தில் இவ்வாறான தனியார் வகுப்புகள் நடத்தப்படுகின்றமையால் மாணவர்களை அனுப்ப பெற்றோர் தயக்கம் காட்டிவருகின்றனர்.

இதேவேளை பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் நடத்தப்படும் தனியார் கல்வி நிலையத்துக்கு தமது பிள்ளைகளை அனுப்பாமல் விடுவதால் அவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதாகவும் பெற்றோர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினருடன் தொடர்புகொண்டு கேட்ட போது "பெற்றோரிடமிருந்து இதுவரை எந்தவித முறைப்பாடும் கிடைக்கவில்லை எனவும், முறைப்பாடு கிடைப்பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" எனவும் தெரிவித்தனர். (ஐ-9)

## கொரோனா, டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கை

கொடிகாமம்,ஒக் .23

சாவகச்சேரி பிரதேச சபையால் கொரோனா மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை தவிசாளர் க. வாமதேவன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கொரோனா பரவல், டெங்கு ஒழிப்பு மற்றும் திண்மக் கழிவகற்றல் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதனடிப்படையில் கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தல் தொடர்பாகவும், எதிர்வரும் மழை காலத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பாகவும், கரவெட்டி பிரதேச சபையினரால் முன்னெடுக்கப் படவுள்ள உக்கக்கூடிய தென்னோலை, பனையோலை மற்றும் வெட்டப்பட்ட வாழை மரங்கள் ஆகியவை எவ்வாறு மீள் சுழற்சி நிலையத்திற்கு இயற்கை பசளை உற்பத்திக்கு வழங்குவது தொடர்பாகவும் மக்களுக்கு விழிப்பூட்டும் செயற்பாடுகள் முன்னெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்து வட்டாரங்களிலும் சபை உறுப்பினர்கள் சுகாதார பிரிவினர் மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சமூக ஆர்வலர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்குவதென முடிவெடுக்கப்பட்டது. (ஐ-159)

## விஜயதசமி நாள் வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.23

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் விஜயதசமி பூசை நிகழ்வும் புதிய வகுப்புகள் ஆரம்பம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறவுள்ளன.

இளங்கலைஞர் மன்றத்தால் இலவசமாக நடத்தப்படும் சங்கீதம், நடனம்,வயலின், வீணை, மிருதங்கம் ஆகிய வகுப்புகளுக்கு அன்றைய தினம் புதிதாக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# பருவ மழை பொய்த்துப் போனாலும் விதைப்புக்கு விவசாயிகள் தயாராகுக!

மன்னார், ஒக்.23

**மன்னாரில் மழை வீழ்ச்சி அற்ற நிலை காணப்பட்டாலும் விவசாயிகள் காலபோகச் செய்கைக்கு தயாராக இருக்க வேண்டும் என்று விவசாயக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.**

மன்னார் மாவட்ட செயலகத்தில் 2020-2021 ஆண்டுக்கான காலபோக விவசாயக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை மாவட்ட பதில் செயலர் எஸ்.குணபாலன் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மன்னாரில் தற்பொழுது வறட்சி தாண்டவமாடிக் கொண்டிருப்பதால் திட்டமிடப்பட்டிருக்கும் நடப்பு வருட (2020-2021) காலபோக விவசாயத்துக்கான நீர் விநியோக ஆரம்ப திகதியில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆகவே விவசாயிகள் அதற்கேற்றவாறு செயல்படுமாறும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி விதைக்கப்படும் நெல்லினம் 2, 2 1/2, 3, 3 1/2, 4, 4 1/2 மாதங்கள் கொண்ட நெற்களாக இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் தற்பொழுது கட்டுக்கரைக்குளத்தின் நீர் மட்டம் குறைந்துள்ளமையால் விவசாயிகள் பாதிக்காதிருக்க குறைந்த மாத நெல்லினத்தை விதைப்பது தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டது.

தற்பொழுது இக் காலபோகத்துக்கு முதல் நீர் விநியோகத் திகதி ஒக்ரோபர் 10 என தீர்மானிக்கப் பட்டுள்ளபோதும் தற்பொழுது கட்டுக்கரைக்குளத்தில் நீர் மட்டம் குறைந்துள்ளமையால் மல்வத்த ஓயாவிலிருந்து நீர் வருகையும் மன்னாரில் மழை வீழ்ச்சியையும் கவனத்தில் கொண்டே நீர் விநியோக ஆரம்பத் திகதி நிர்ணயிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆகவே விவசாயிகள் மழை மற்றும் நீர் விநியோகத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் வயல்களை உழுது ஆயத்தமாகுமாறு தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தின்படி விதைப்பு இறுதி திகதிகளாக 2, 2 1/2, 3, 3 1/2, மாத நெல்லினத்துக்கு நவம்பர் 30ஆம் திகதி என்றும் 4, 4 1/2 மாத நெல்லனத்துக்கு நவம்பர் 15ஆம் திகதி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-60)



## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

காரைநகர்,ஒக்.23

காரைநகரை பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் ஞானப்பிரகாசம் மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் அதிகாரியாகவும்,சமிஞ்ஞை தொலைத் தொடர்பு சாதன இயக்குநராகவும் சேவையாற்றி ஓய்வு பெற்றவராவார். தமிழ்,ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் பரிச்சயமானவர் என்பதுடன் சிறந்த சமய, சமூக சேவையாளருமாவார். (ஐ)

## முச்சக்கர வண்டிகளை பதிவு செய்யவும்

கொடிகாமம், ஒக். 23

எழுதுமட்டுவாழ் 13 ஆம் வட்டாரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பதிவு செய்யாமல் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்யுமாறு சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது மனுவொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட ஏனைய இடங்களில் முச்சக்கர வண்டிகள் பதிவு செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுகின்றன.

இது போன்று 13 ஆம் வட்டாரத்துக்கு உட்பட்ட கரம்பகம், எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் சேவையில் ஈடுபடுகின்ற முச்சக்கர வண்டிகளும் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

இதன்மூலம் எமது சபைக்கு வருமானத்தை ஏற்படுத்திக் கொடுப்பது மட்டுமன்றி சமூக சீரழிவுகளையும் கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

இதனையடுத்து குறித்த பகுதியில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சபையில் தீர்மா னிக்கப்பட்டது. (ஐ-159)

## டெங்கு ஒழிப்பின்போது கழிவகற்றலும் தீவிரம்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்.மாநகர பிரதேசத்தில் நடைபெற்று வரும் விசேட டெங்கு ஒழிப்பு வாரத்தின்போது உக்காத திண்மக் கழிவுகள் அகற்றும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கூடுதலாக நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாகக் காணப்படும் கழிவுப் பொருள்கள் யாவும் சேகரிக்கப்பட்டு அகற்றப்படுகின்றன. இதற்கென விசேடமாக கழிவகற்றும் வாகனம் மற்றும் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மக்களின் சுற்றாடல்கள் மற்றும் பொது இடங்களில் தேங்கிக் காணப்படும் சிரட்டை, வெற்று ரின்கள், பிளாஸ்ரிக் போத்தல்கள், கோம்பைகள் உள்ளிட்ட, உக்காத பொருள்கள் இவ்வாறு அகற்றப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகள் ரீதியாக இடம்பெற்று வரும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போதும் இந்தத் திண்மக் கழிவகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ-17)

தென்மராட்சியில்

## 160 குடும்பங்களுக்கு இலவச மின்சாரம்

சாவகச்சேரி,ஒக்.23

வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் இலவச மின்சார இணைப்புத் திட்டத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் 160 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் அறிவிப்பின் பிரகாரம் கைதடி கிழக்கு , கைதடி மேற்கு, நாவற்குழி மேற்கு, நாவற்குழி கிழக்கு, கோவில்குடியிருப்பு , மறவன்புலவு, கோவிலாக்கண்டி, மட்டுவில், கல்வயல், நுணாவில் மேற்கு, தென் மட்டுவில், மட்டுவில் மத்தி, மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, சரசாலை தெற்கு , சரசாலை மத்தி, சரசாலை வடக்கு வெள்ளாம்போக்கட்டி, பாலாவி, கொடிகாமம் மத்தி, உசன், கரம்பகம், கெற்பேலி, மிருசுவில் வடக்கு, குடமியன், வரணி வடக்கு, இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி, தாவளை இயற்றாலை, மட்டுவில் தெற்கு, சங்கத்தானை, கொடிகாமம் தெற்கு, கைதடி தெற்கு, மிருசுவில் தெற்கு, மாசேரி, வரணி இயற்றாலை, மந்துவில் மேற்கு ஆகிய பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே இலவசமாக மின்சாரம் வழங்கப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஒக்.23

கிளிநொச்சி சமூக அபிவிருத்தி பேரவையின் 10 லட்சம் மரங்கள் நடும் திட்டத்தின் மாபெரும் இணையத் தள கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை இலங்கை நேரம் இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரந்தன் இளைஞர் வட்டம், பரந்தன் மத்தி விளையாட்டுக் கழகம், பாடசாலைகள் மற்றும் அனைத்து சமூக தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. Meeting ID: 869 0489 7338, Passcode: 411551 (ஐ-222)

## வாசிப்பு மாதத்தில் பல்வேறு போட்டிகள்

சாவகச்சேரி,ஒக்.23

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி பொது நூலகத்தால் பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்று காரணமாக வாசிப்பு மாத நிகழ்வுகள் நடத்துவதில் தாமதமேற்பட்ட நிலையில் தற்போது பாடசாலை மாணவர்கள் முன்பள்ளி சிறார்கள் மற்றும் வாசகர்களுக்கான போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

முன்பள்ளி மற்றும் தரம் ஒன்று மாணவர்களுக்கான கதை கூறல் மற்றும் அபிநய பாடல் ,தரம் 2 , 3. மாணவர்களுக்கான சித்திரம்,தரம் 3. 4 மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி ஆகியவையும் 18வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான தமிழ், சிங்கள மொழி அறிவுப் போட்டி,"பாடசாலை விடுமுறை காலத்தை வீட்டுக்கும் நாட்டுக்கும் பயனுள்ளதாக்குவோம்" என்னும் தலைப்பில் சிறுகதைப் போட்டியும் நடத்தவுள்ளனர்.

அத்துடன் வாசகர்கள், மாணவர்களுக்கான. வீட்டுத் தோட்டப் போட்டியையும், கவிதை எழுத ஆர்வமுள்ளவர்களுக்கான கவிதைப் போட்டியையும் நடத்தவுள்ளனர்.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வதியும் மாணவர்கள் மற்றும் வாசகர்கள் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி பொது நூலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார். (ஐ-9)



இளங்கலைஞர் ஆ.முல்லைத்திவ்யனால் பொலிகண்டியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 24 பேருக்கு அப்பியாசக் கொப்பிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டன. (ஐ-159)

## காலமானார் முன்னாள் எம்.பி.

வவுனியா, ஒக்.23




வன்னி மாவட்டத்தின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கே.பாலச்சந்திரன் நேற்று மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார்.


1951 ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது 69 ஆவது வயதில் காலமானார். இவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், நேற்று அதிகாலை 2.30 மணியளவில் உயிரிழந்தார்.

1994 முதல் 2000 ஆம் ஆண்டு வரை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சார்பாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கே. பாலச்சந்திரன் கண்டியை பிறப்பிடமாகக் கொண்டவராவார்.

வவுனியாவில் வசித்து வந்த இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலப்பகுதியில் வவுனியாவில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-110)







# வவுனியாவில் டெங்கு அபாயம்

வவுனியா, ஒக்.23

**வவுனியா புதிய பேருந்து நிலையம் முன்பாக டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இந்தப் புதிய பேருந்து நிலையம் முன்பாக உள்ள கழிவு வாய்க்காலில் கழிவு நீர் வழிந்தோடாது தேங்கி நிற்பதுடன், இந்தக் கழிவு வாய்க்காலில் வெற்றுப் போத்தல்கள், பொலித்தீன் பைகள் என்பனவும் நீண்ட நாள்களாக அகற்றப்படாது பரவலாக காணப்படுகின்றன.

இதன் காரணமாக அந்தப் பகுதியில் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாகவுள்ளது என்றும், டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொதுமக்கள், பேருந்து சாரதிகள், நடத்துநர்கள், முச்சக்கர வண்டி ஒட்டுநர்கள், பொலிஸார் எனப் பலர் தினமும் வந்து செல்லும் இப்பகுதி இவ்வாறு காணப்படுகின்றமை குறித்து பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பிராந்திய சுகாதார பணிமனையின் பொதுசுகாதார பரிசோதகரை தொடர்புகொள்ள முயற்சித்தபோதும் பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இவ்வாறானவர்களின் பொறுப்பற்ற செயற்பாடே டெங்கு நோய் தற்போது பரவலடையக் காரணம் எனவும் மக்கள் மேலும் விசனம் தெரிவித்துள்ளனர். (ந-18)

## கொன்சுலர் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, ஒக்.23

வெளிநாட்டு அமைச்சின் கொன்சுலர் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்த்து, கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் முகமாக, அமைச்சின் கொன்சுலர் விவகாரங்கள் பிரிவால் வழங்கப்படும் அனைத்துச் சேவைகளையும் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்துவதற்கு வெளிநாட்டு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அந்தவகையில் கொழும்பிலுள்ள சிலின்கோ கட்டடத்தில் அமைந்துள்ள கொன்சுலர் விவகாரங்கள் பிரிவு 'ஏற்றுமதி ஆவணங்களை' சான்றுறுதிப்படுத்திக் கொள்வதற்காக இப் பிரிவுக்கு வருகை தரும் ஏற்றுமதியாளர்கள் உட்பட பார்வையாளர்களுக்காக மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

அத்துடன் மாத்தறை மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய கொன்சுலர் அலுவலகங்களால் மேற்கொள்ளப்படும் ஆவணச் சான்றளிப்பு சேவைகளும் மறு அறிவித்தல் வரை வழங்கப்படமாட்டாது என்றும் வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் இறப்புக்கள் மற்றும் இறப்பு தொடர்பான ஆவண உதவிகள் சார்ந்த கோரிக்கைகளுக்கு 0776032252, 0773586433, 0718415623, 0701428246 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனும், 0112446091/0112333450 ஆகிய தொலைநகல் இலக்கங்களுடனும் cypher@mfa.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரியுடனும் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## அனுமதியின்றி மணல் அகழ்ந்த ஐவர் கைது!

மன்னார், ஒக்.23

மன்னார் இலுப்பைக்கடவை கூராய் ஆற்றுப் பகுதியில் அனுமதியின்றி மணல் அகழ்ந்த குற்றச்சாட்டில் ஐந்து பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது மணல் ஏற்றிய ஐந்து வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவின் பணிப்பின் பெயரில் மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வு அதிகாரி ப.சஞ்சீவ ராஜபக் ஷ தலைமையிலான குழுவினரே இவர்களைக் கைதுசெய்தனர். (ந-213)

## கொரோனாவிலிருந்து விடுபட பிரார்த்தனை செய்யுங்கள்

மன்னார், ஒக்.23

கொரோனா நோயிலிருந்து விடுபட வேண்டி, நாளை சனிக்கிழமை வடக்கு, கிழக்கு மறைமாவட்ட மக்கள் ஒன்றாக இணைந்து மரியன்னையிடம் சிறப்பாக வேண்டும்படி வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த மாதம் கத்தோலிக்க மக்களால் சிறப்பாக நினைவுகூரப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் 'உலக நாடுகள் கொரோனாத் தொற்றிலிருந்து விடுதலைபெற அனைவரும் இணைந்து பிரார்த்தனை செய்வோம்' என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ந-60)

## இறங்குதுறையை ஆழப்படுத்தி தருமாறு மீனவர்கள் கோரிக்கை



மன்னார், ஒக்.23

மன்னார் நறுவிலிக்குளம் கடற்கரை இறங்குதுறையை ஆழப்படுத்தித் தருமாறு அந்தப் பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அங்கு கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீன்பிடிக்க கடலில் செல்வதற்கு கரையிலிருந்து 250 மீற்றருக்கும் அதிகமான தூரம் வரை படகுகளை மிகவும் சிரமப்பட்டு கடலுக்குள் இழுத்துச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் கரையிலிருந்து இந்தப் பகுதியை ஆழப்படுத்தி இரு பக்கமும் பாதுகாப்பு அணை அமைத்துத் தருமாறு நறுவிலிக்குளம் மீனவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மீனவர்களின் கோரிக்கையை அடுத்து செல்வம் அடைக்கலநாதனின் பணிப்பின் பெயரில் நேரில் சென்று பார்வையிட்ட அவரது பிரத்தியேக செயலாளர் டானியல் வசந்த்திடம் நறுவிலிக்குளம் மீனவர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பிலும் தெரியப்படுத்தியுள்ளனர். (ந-213)


## வவுனியாவில் மூடப்பட்டன வியாபார நிலையங்கள்

வவுனியா, ஒக்.23

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் பயணித்த வியாபார நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

வவுனியா நெடுங்கேணியில் வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபட்ட வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்த நிலையிலேயே இந்த வியாபார நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. அந்தவகையில் அவர்கள் சென்று வந்தனர் எனத் தெரிவிக்கப்படும் வேப்பங்குளம் பகுதியிலும் பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் மற்றும் மரக்காலை என்பனவே தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.


தொற்று ஏற்பட்டவர்களுடன் தொடர்புகளைப் பேணிய ஏனைய ஊழியர்களுக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டமையுடன் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் தொடர்பான தகவல்களும் சுகாதாரப்பிரிவினரால் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (ந-110)



# பட்டதாரி பயிலுநர்கள் பயிற்சிகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக்.23
அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ள பட்டதாரிகளுக்கான பயிற்சி வேலைத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.
அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கொரோனாத் தொற்றைக் கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.
இதுவரை அரச சேவைகளுக்கான பயிற்சிகளில் 50 ஆயிரம் பட்டதாரிகள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களை பிரதேச செயலகங்களுக்கு அழைக்கும்போது, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, இவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# கேகாலையில் 23 பேருக்கு கொரோனா



கொழும்பு, ஒக்.23
கேகாலை மாவட்டத்தில் 23 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. கேகாலை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் மருத்துவர் குமார விக்ரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.
இதேவேளை, "கேகாலை வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் பணியாற்றும் மூன்று மருத்துவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு மருத்துவரின் கணவர், மகன், மகள் மற்றும் ஊழியர் ஆகியோரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என கேகாலை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

# உத்தியோக அட்டைக்கு ஊரடங்கு அனுமதி

கொழும்பு, ஒக்.23
ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அலுவலக ஊழியர்கள் தங்களது உத்தியோக அடையாள அட்டை அல்லது குறிப்பிட்ட ஆவணங்களை ஊரடங்கு அனுமதிப்பத்திரமாகப் பயன்படுத்த முடியும் என பரீட்சைத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.
பரீட்சை கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கே இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# அமெரிக்க செயலர் வருகை முன்னேற்றத்தை வழங்கும்

## அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.23
**சுதந்திரமான வெளிப்படையான இந்தோ – பசுபிக் பிராந்தியம் குறித்த இரு நாடுகளினதும் பொதுவான இலக்குகளில் மேலும் முன்னேற்றத்தை காண்பதற்காகவே அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.**

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் மோர்கன் ஓர்டகஸ் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
வலுவான இறையாண்மையுள்ள இலங்கையுடனான கூட்டு செயற்பாடு குறித்த அமெரிக்காவின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதற்கு இந்த விஜயம் உதவும் என அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.
இலங்கை வரவுள்ள அமெரிக்க இராஜாங்க செயலர் 28ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள இரு நாடுகளுக்கான இரு தரப்பு பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# தலைமைப் பதவிக்கு தயாராகும் நவீன்

கொழும்பு, ஒக்.23



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடவுள்ளதாக நவீன் திஸநாயக்க தெரிவித்துள்ளார். தலைமைப் பதவியில் இருந்து விலகுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ள நிலையிலேயே தான் இந்த முடிவை எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக யார் இருக்க வேண்டும் என்பதை கட்சியின் செயற்குழுவால் மட்டும் தீர்மானிக்க முடியாது. கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களையும் கேட்டு புதிய தலைவரை நியமிக்க முற்பட வேண்டும்." எனக் குறிப்பிட்டுள்ளார்.
நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றுத் தோல்வியைத் தழுவியது. இதனையடுத்து தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக ரணில் அறிவித்திருந்தார்.
இதற்கமைய கடந்த மாதம் ருவான் விஜேவர்தன ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பிரதித் தலைவராக தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# 55 ஆயிரத்து 73 பேருக்கு தனிமை நிறைவேற்றம்

கொழும்பு, ஒக்.23
தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து, இதுவரை 55 ஆயிரத்து 73 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.
76 தனிமைப்படுத்தல் நிலையங்களில், 8 ஆயிரத்து 623 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். 2 ஆயிரத்து 464 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன், 356 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். (ந-இ)



# ஊரடங்கு விதிமீறல்: 83 பேர் கைது

கொழும்பு, ஒக்.23
தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்ட விதிமுறைகளை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில் 24 மணிநேரத்தில் 83 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார். இதற்கமைய, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டவிதிமுறைகளை மீறி பயணித்த குற்றச்சாட்டில் இதுவரை 596 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் குறித்த காலப்பகுதியில் ஊரடங்குச் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த 76 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ந-இ)

# பாதுகாப்பின் உறுதியற்றதன்மையே ஈஸ்டர் தாக்குதலுக்கு மூலகாரணம்


## எம்.பி எஸ்.பி. திஸநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.23
நல்லாட்சி அரசாங்கத்தில் நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஏற்பட்ட உறுதியற்றதன்மை காரணமாகவே ஈஸ்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில்தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதியிடம் ஒரு சில அதிகாரங்களும் பிரதமரிடம் ஒரு சில அதிகாரங்களும் காணப்பட்டன. ஏனைய சில விடயங்கள் ஆணைக்குழுக்கள் வசம் காணப்பட்டன. இருவரும் முரண்பட்ட நிலைமையிலேயே செயற்பட்டனர். இதனால் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஏற்பட்ட உறுதியற்றதன்மையாலேயே உலகில் எங்கோ ஒரு நாட்டில் மேற்கொள்ளப்படவிருந்த பயங்கரவாதத் தாக்குதல் இலங்கையில் மேற்கொள்ளப்படக் காரணியாக அமைந்துள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)




# மருந்து விநியோகம் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.23
கொழும்பு, கம்பஹா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் நோயாளிகளுக்கான மருந்துகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மத்திய தபால் பரிமாற்றத்தின் தபால் அத்தியட்சகர் அஸ்லாம் ஹசன் இதனைத் தெரிவித்துள்ளார்.
வைத்தியசாலைகள் மற்றும் அரச மருந்தகங்களில் வழங்கப்படும் மருந்துகள் இவ்வாறு விநியோகிக்கப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)



# இன்றைய நாள்

**மேடம்:** குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உடல் நலம் சீராகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**இடபம்:** பழைய பிரச்சினைகளை நினைத்துப் பார்த்து கோபப்பட்டுக் கொண்டு இருக்காதீர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக்கொள்ளாதீர்கள்.

**மிதுனம்**பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வாகனத்தை சரி செய்வீர்கள்.

**கடகம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளிவட்டாரத்தில் புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும்.

**சிம்மம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி:** பால்ய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். கலைப் பொருள்கள் வாங்குவீர்கள்.

**துலாம்:** துணிச்சலாக சில முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். பூர்வீக சொத்துப் பிரச்சினையில் நல்ல தீர்வு கிடைக்கும்.

**விருச்சிகம்:** கணவன்மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். தோற்ற பொலிவு கூடும். பாதியில் நின்ற வேலைகள் முடிவடையும். உறவினர்கள் ஒத்துழைப்பார்கள்.

**தனுசு:** உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும்.

**மகரம்:** குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். ஆடம்பர செலவுகளால் சேமிப்புகள் கரையும்.

**கும்பம்:**குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்திசெய்வீர்கள். புது வேலை கிடைக்கும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயன் அடைவீர்கள்.

**மீனம்:** உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்து கொள்வீர்கள். நம்பிக்கைக்குரியவரை ஆலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

# மட்டக்களப்பு மருத்துவமனைகளில் 212 கொரோனாத் தொற்றாளர்கள்

மட்டக்களப்பு, ஒக்.23

மட்டக்களப்பில் கரடியனாறு மற்றும் காத்தான்குடி மருத்துவமனைகளில் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்ட 212 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் ஏ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், " மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகளாக கரடியனாறு மற்றும் காத்தான்குடி மருத்துவமனைகள் மாற்றப்பட்டுள்ளன. இதனடிப்படையில், தெரிவு செய்யப்பட்ட மருத்துவமனைகளில் புனர்நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், ஏற்கனவே வைரஸ் தொற்று சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ள காத்தான்குடி வைத்தியசாலையில் இதுவரை 170 பேர் மற்றும், கரடியனாறு வைத்தியசாலையில் பேலியகொட மீன் சந்தையில் அடையாளம் காணப்பட்ட 42 பேர் உட்பட இரு மருத்துவமனைகளிலும் 212 பேர் நேற்று முன்தினம் இரவு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பேலியகொட மீன் சந்தைப் பகுதிக்குச் சென்ற கல்முனை, மட்டக்களப்பு பகுதிகளைச் சேர்ந்த மீன் வியாபாரிகளை அடையாளம் கண்டு அவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பேலியகொட மீன் சந்தைப் பகுதிக்குச் சென்றவர்கள் யாராவது இருப்பின் அவர்கள் தொடர்பாக பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)



## சட்டவிரோத மண்ணகழ்வு: ஆறு பேர் மடக்கிப்பிடிப்பு

வடமராட்சி, ஒக். 23

பருத்தித்துறை - துன்னாலைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறப்பு அதிரடிப்படையின் சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் 25 தொடக்கம் 40 வயதுவரை உடையவர்கள்.

மணல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட மூன்று டிப்பர்களும் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனபொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-26)

## களுத்துறையில் 6 கிராமங்கள் பூட்டு

களுத்துறை, ஒக்.23

களுத்துறை மாவட்டத்தில் 6 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களாக நேற்று முதல் அறிவிக்கப்பட்டுள்ளன.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் களுத்துறை மாவட்டத்தில் பின்வரும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மீண்டும் அறிவிக்கும் வரையில் தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களாக பெயரிடப்பட்டிருக்கின்றன என கொவிட் - 19 தொற்றுப் பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் அகலவத்த பிரதேச செயலக பிரிவில் அகலவத்த, கோரக்கொட, பெரகம, தாபிலிகொட, கெகுலண்தர வடக்கு ஆகிய கிராமங்களும் பாலிந்த நுவர பிரதேச செயலக பரிவில் பெல்லன கிராமமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

## தென்மராட்சியில் மக்களுக்கு கொரோனா விழிப்புணர்வு

சாவகச்சேரி,ஒக்.23

தென்மராட்சி பிரதேசத்தில் தினமும் மாலை வேளைகளில், பொலிஸார் கொரோனாத் தொற்று தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்பின் பேரில், சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் கூடும் இடங்களில் கொரோனாத் தொற்று தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஒலிபெருக்கி மூலம் பிரசாரம் செய்து வருகின்றனர். (க-9)

## அதிபர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண ஊவா ஆளுநர் முஸம்மில் ஆலோசனை

கொழும்பு, ஒக்.23

அதிபர் சேவைக்கு இணையாக பணியாற்றும் கடமை நிறைவேற்று பதில் அதிபர்களின் சேவை அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு அவர்களின் தரங்களை உயர்த்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பதில் அதிபர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும் என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் கல்வி அமைச்சுக்கு ஆலோசனை முன்வைத்துள்ளார். ஊவா மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பில் கல்வி அமைச்சர் ஜி.எல் பீரிஸ் தலைமையில் ஊவா மாகாண சபையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஆளுநர் இவ் ஆலோசனையை முன்வைத்தார்.

சுமார் 166 பாடசாலைகளுக்கு அதிபர்கள் இல்லை எனவும், சில பாடசாலைகளில் பதில் அதிபர்கள் சுமார் 10 வருடங்களுக்கு மேல் கடமையாற்றியுள்ளார்கள் எனவும் தெரிவித்த கல்வி அமைச்சர் ஜி.எல் பீரிஸ், இவ்வாறான நிர்வாக பிரச்சினைகளைத் தீர்க்க தமது அமைச்சு அவசர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது எனவும் குறிப்பிட்டார். அத்துடன், இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, நல்ல பெறுபேறுகளை வெளியிடும் பதில் அதிபர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருக்கிறார் எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிடுகையிலேயே ஆளுநர் முஸம்மில் மேற்குறித்த ஆலோசனையைக் கல்வி அமைச்சுக்கு முன்வைத்தார். இதன்போது மாகாண சபை அதிகார எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் காணப்படும் அதிபர், ஆசிரியர் பற்றாக்குறை, அடிப்படை வசதிகள், முன்பள்ளி பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகள் நேரடியாக அமைச்சருக்குத் தெளிவுபடுத்தினர். (ந-இ)

# மீன் சந்தையுடன் தொடர்பு: 863 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு,ஒக்.23

பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடைய 863 பேர் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பப்பட்டுள்ளனர் என்று இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொரோனா நோயாளிகள் சிலருடன் தொடர்பு வைத்திருந்தனர் என்று சுகாதார அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்டவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டனர்.

தியத்தலாவ தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு 180 பேரும், குண்டசாலை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு 150 பேரும், மட்டக்களப்பு பல்கலைக்கழக தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு 192 பேரும், முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு 146 பேரும், பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு 85 பேரும், பெரியகாடு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு 110 பேரும் அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (சு-இ)

## மனைவியின் கார்முன் பாய்ந்து கணவன் உயிர் மாய்ப்பு

கொழும்பு,ஒக்.23

மனைவியிடம் தகராறில் ஈடுபட்ட கணவன், மனைவி செலுத்திச் சென்ற காரின் முன் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்டார். இந்தச் சம்பவம் பொல்கஸ்வோவிட வெலகும்புரவில் நடந்துள்ளது.

உயிரிழந்த நபரின் மனைவியான கோடீஸ்வர வர்த்தகப்பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பதுடன், அவர் நீண்ட காலமாக பணம் கேட்டு அவரின் கோடீஸ்வர மனைவியைத் தொல்லை செய்துள்ளார். இது குறித்து பல தடவைகள் கஹதுடுவ பொலிஸில் முறைப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (சு-இ)

## அலரி மாளிகையிலும் கொரோனா பரிசோதனை

கொழும்பு,ஒக்.23

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தலையடுத்து, பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையிலும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனை தற்செயலாக மேற்கொள்ளப்பட்டது என்று கொரோனாத் தொற்றுத் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் கடந்த ஏப்ரல் மாதம் அலரி மாளிகையில் கடமையாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டது. அதன்படி அலரி மாளிகையில் பணியாற்றிவரும் சுமார் 240 க்கும் மேற்பட்டவர்களுக்குப் பரிசோதனை நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சு-இ)

## ரிஸ்கான் மீதான வழக்கு; ஜனவரியில் விசாரணைக்கு

கொழும்பு,ஒக்.23

போலி ஆவணங்களைத் தயாரித்து, தலைமன்னார் பிரதேசத்தில் இடமொன்றை விற்கும் செயற்பாட்டில் ஈடுபட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, ரிஸ்கான் பதியூதீன் மீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீனின் சகோதரர்களில் ஒருவரான, ரிஸ்கான் பதியூதீன் உள்ளிட்ட சந்தேகநபர்கள் இருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை, அடுத்த வருடம் ஜனவரி 21ஆம் திகதி எடுத்துக்கொள்ள கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த முறைப்பாடு கொழும்பு பிரதான நீதிவான் மொஹமட் மிஹார் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. முறைப்பாடு தொடர்பாக அரச பகுப்பாய்வு அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை என்று குற்ற விசாரணைப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர். இதனையடுத்து முறைப்பாட்டை அடுத்த வருடம் எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. (சு-இ)



ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்தின் நிதி அனுசரணையில், துணுக்காய் ஒளிரும் வாழ்வு அமைப்பின் ஊடாக, துணுக்காய் மற்றும் பாண்டியன்குளம் பிரதேசங்களைச் சேர்ந்த, நான்கு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. (சு-222)

வாசகர் கடிதம்

## அழிவடையும் வரலாற்றுச் சின்னங்கள்

தமிழ் மக்களுக்கு நடந்த துன்பதுயரங்கள் படுகொலைகளை மூடி மறைப்பதும், நில ஆக்கிரமிப்பு உள்ளிட்ட எமது வரலாற்றுச் சின்னங்களை இல்லாமல் செய்யும் சம்பவங்கள் பல.

ஆனால் தமிழர்களாகிய நாமும் எமது பழம்பெரும் பொக்கிசங்களை அழித்து, இல்லாமல் செய்வதும் மிகப் பெரிய சாபக்கேடாகும்.

கொடிகாமம் -பருத்தித்துறை பிரதான வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டு வருகிறது. இந்த வீதியில் எமது முன்னோரால் அமைக்கப்பட்ட பல சுமைதாங்கிகள் மூதாதையரின் வரலாற்றை எடுத்துக் கூறிய வண்ணம் உள்ளன. இதில் வேதனை என்னவெனில் வரணி வாழைத்தோட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்ட சுமைதாங்கி இல்லாதழிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தில் எஞ்சியிருக்கும் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பது ஒவ்வொருவரது முக்கிய பொறுப்பு.

எனவே தமிழ் உணர்வுமிக்கவர்களே வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க ஒன்று திரண்டு குரல் கொடுங்கள். அமைதியாகப் போராடுங்கள். அதுவே எமது இன்றைய சூழலுக்கு வெற்றியளிக்கும்.

*அ.அன்பு, வரணி.*



சுகி.சிவம்

## புத்தகங்களும்,வழிகாட்டும் நபரும் முக்கியம்!

அறிவுக்கும், சிந்தனைக்கும், வாழ்க்கையின் வெற்றிக்கும் துணை நிற்கக் கூடியது கல்வி. கல்வியின் பெரும் பகுதி சென்ற நூற்றாண்டு வரையில் புத்தகங்கள் மூலமாகத்தான் கிடைத்தது. புத்தகங்களை வாசிப்பதன் மூலமாக, சுவாசிப்பதன் மூலமாக, அதை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றங்களை நாம் கொண்டுவர முடிந்தது.

மனித குலத்துக்கே வெற்றிப் பாதையைக் காட்ட விரும்பிய திருவள்ளுவர், பெரிய சிந்தனையாளர்கள், பெரிய அரசியல் புரட்சிக்கு வித்திட்டவர்கள் அனைவரும் புத்தகங்கள் மூலமாகத்தான் அறிவை மக்களுக்கு கொடுத்துள்ளனர்.

அதே சமயம் புத்தகங்களை வைத்துக் கொண்டு இருப்பதால் மட்டுமே நாம் முன்னுக்கு வந்துவிட முடியாது. புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற விஷயங்களை உள்வாங்கி வாழ்க்கையில் கொண்டுபோக வேண்டும். அப்போதுதான் நம் வாழ்க்கை நம் கையில் வசப்படும்.உலக வரலாற்றில் பலர் புத்தகங்கள், எழுத்து, பத்திரிகைகள் மூலமாக மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளனர்.

தன்னுடைய வாழ்க்கையைப் பெரிய அளவில் மாற்ற வேண்டும் என நினைப்பவர்கள் புத்தகங்களைத் தேர்வு செய்து படிக்க வேண்டும். வாழ்க்கை மாற்றத்துக்குப் புத்தகங்கள் எந்த அளவுக்கு முக்கியமோ, சரியான வழிகாட்டும் நபரைத் தேர்வு செய்வதும் முக்கியம். உயர்ந்த நிலைக்கு வந்த பிறகு, வழிகாட்டியாக இருந்தவர்களுக்கு நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும்.அற இலக்கியங்கள் தமிழகத்தின் தனித்த சிறப்பு வாய்ந்தவை. எப்படி வாழ வேண்டும். என்ன மாதிரியான அறநெறிகளைப் பின்பற்ற வேண்டும் என அற இலக்கியங்கள் கூறுகின்றன.

இந்த இலக்கியங்களைப் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். மனிதன்தான் வாழ்க்கையை செதுக்குகிறான். நம் வாழ்க்கை நம் கையில் தான் இருக்கிறது என்பதை உணர்ந்து சரியாகப் பயன்படுத்தினால் வெற்றிப் பாதை நிச்சயமாகக் கிடைக்கும். வெற்றிப் பாதைக்கு எந்த வழியில் போக வேண்டும், எப்படி நம்மை செதுக்கிக் கொள்ள வேண்டும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

# 20 ஆவது திருத்தச் சட்டம் ஜனநாயகத்துக்கு சாவு மணி

## விக்னேஸ்வரன் சாடல்



கொழும்பு,ஒக்.23

20 ஆவது திருத்தச் சட்டம் ஜனநாயகத்துக்கும், மனித உரிமைகளுக்கும் சாவு மணி அடிக்கப் போகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம் பற்றிய கருத்துப் பரிமாற்றம் தொடர்பான அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அனுப்பப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மத்தியில் ஒவ்வொரு கட்சியும் ஆட்சிப் பீடம் ஏறும் போது நாட்டைப் பற்றிச் சிந்திக்காது, நாட்டு நலன்கள் பற்றிச் சிந்திக்காது தமது கட்சிகளின், அங்கத்தவர்களின், ஆதரவாளர்களின் நலன்களை முதன்மைப்படுத்தி, சட்டங்களை இயற்றிவருவது இந்த நாட்டின் துரதிர்ஷ்ட வரலாறாகத் தொடர்ந்து வந்துள்ளது.

லீ குவான் யூக்களாகப் பரிணமிக்க விரும்புபவர்கள் தமது பக்கச்சார்பான சிந்தனைகளைக் கைவிட்டால் தான் நாட்டுக்கு நன்மை செய்யலாம். லீ குவான் யூ, சீன பௌத்த பாதையில் செல்லவில்லை. அவர் சிங்கப்பூர் மக்கள் அனைவரையும் நேசித்தவர்.

சிறுபான்மையினரை பயங்கரவாதிகள் என்று சித்திரிப்பது பெரும்பான்மையினரிடம் இருந்து வாக்குகளைப் பெற்றுக் கொடுக்கும். ஆனால் நாட்டை முன்னேற்ற விடாது. ஆகவே அதிகாரத்தைத் தனி மனிதர் ஒருவரிடம் குவிக்கும் எண்ணத்துடன் தான் இந்த 20 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் சாவு மணி அடிக்கப் போகின்றது.

மனித நாகரிகம் முன்னேற முன்னேற எவ்வாறு ஜனநாயகப் பண்புகளை மேலும் மேம்படுத்தி மனித உரிமைகள், சமத்துவம் மற்றும் சகவாழ்வுடன் கூடிய வாழ்க்கையை ஏற்படுத்தலாம் என்று உலக நாடுகள் சிந்தித்துச் செயற்பட்டு வரும் இந்த வேளையில், ஜனநாயகத்துக்கு சாவு மணி அடித்து, நல்லாட்சிக்குரிய பண்புகளை குழிதோண்டிப் புதைக்கும் விசித்திரம் இந்த நாட்டில் இடம்பெறுகின்றது.

ஜனநாயகத்தில் இருந்து சர்வாதிகாரத்தை நோக்கி ஆட்சிப் பண்புகளின் பரிணாமம் திசை மாறுவதற்கான காரணம் வெறுமனே பதவி மோகம் என்று மட்டும் நான் பார்க்கவில்லை. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சில அரசியல் நிகழ்வுகளுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே நான் இதனைப் பார்க்கின்றேன். தமிழ் மக்கள் தம் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராகவும், உரிமைகளை வென்றெடுப்பதற்கும் மேற்கொண்டு வரும் ஜனநாயக ரீதியான போராட்டங்களை மேற்கொள்வதற்கு இன்று ஒரு சில ஜனநாயக இடைவெளிகள் காணப்படுகின்றன. அவற்றையும் அடைத்து இரும்புக்கரம் கொண்டு எமது போராட்டத்தை நசுக்குவதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டமும் இதன் பின்னால் இருப்பதாக நான் கருதுகின்றேன்.

ஜனாதிபதி செயலணி என்ற அமைப்புக்களின் கீழ் சிறுபான்மையினரின் காணிகள் திணைக்களங்களால் கையேறகப்படுகின்றன. பாதுகாப்பு என்ற போர்வையின் கீழ் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட படையினர் தமிழ் பேசும் மக்கள் தமது உணர்வுகளையும் அபிலாஷைகளையும் வெளிக்கொண்டுவராது அவர்களைக் கட்டுப்படுத்த வடக்கு, கிழக்கில் குவிக்கப்பட்டுள்ளார்கள். வனத் திணைக்களம் போன்றவை மக்களின் பாரம்பரிய காணிகளைக் கையேற்றுக் கொண்டிருக்கின்றன. அரச அரவணைப்பின் பின்னணியில் சட்டத்துக்குப் புறம்பாக எமது வளங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன. மகாவலித் திட்டத்தின் கீழ் பிற மாகாண மக்கள் எங்கள் மாகாணங்களில் குடியேற்றப்பட்டு வருகின்றனர். ஆனால் வாக்குறுதி அளித்தவாறு மகாவலி நீர் ஒரு சொட்டேனும் வடக்கு நோக்கி இன்று வரையில் வரவில்லை. எமது எந்திரிகளின் கூற்றுப்படி அது என்றுமே வராது. இது தான் வடக்கு, கிழக்கின் இன்றைய நிலைமை.

கடந்த 20 வருடங்களாக இனப்பிரச்சினையை மையப்படுத்திய புதிய அரசமைப்பைக் கொண்டுவரப்போவதாக மக்களிடத்தில் ஆணைகேட்டு ஆட்சிபீடம் ஏறிய எவரும் அதனை நிறைவேற்ற முன்வரவில்லை. அதேபோல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக ஆணைகேட்டு ஆட்சிபீடம் ஏறிய எவரும் அதனையும் நிறைவேற்றவில்லை. ஆனால், இந்த அரசு கடந்த உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலானது ஏதோ நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டதனால் ஏற்பட்ட சம்பவமாக உருவகித்து ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் கூட்ட முனைகின்றது.

இதனால் தான் ஜனாதிபதி கட்டுப்பாடற்ற அதிகாரங்களைப் பெற வேண்டும் என்று கூறுகின்றார்கள். ஒரு கள்வனையோ அல்லது ஒரு குண்டுதாரியையோ பிடிக்க வேண்டுமாக இருந்தால், நிறைவேற்று ஜனாதிபதி இருந்தால் தான் பிடிக்க முடியும் என்ற இந்த சிந்தனை முட்டாள்தனமானதாக அல்லவா இருக்கின்றது. உண்மையில் ஏப்ரல் சம்பவம் இடம்பெறுவதற்கு பாதுகாப்பு மற்றும் படை அதிகாரிகளின் அசண்டையும், மேலும் பாதுகாப்புத்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தமையுமே பிரதான காரணங்களாவன. நீதித்துறை, பொலிஸ் துறை மற்றும் பொது அலுவலர் சேவை ஆகியனவற்றைச் சுதந்திரமாகச் செயலாற்ற விட்டிருந்தால் ஏப்ரலில் அனர்த்தம் நடைபெற்றிராது.

உலகில் அநேகமான நாடுகளில் ஜனாதிபதி முறை ஆட்சி இல்லை. அப்படியாயின் அந்த நாடுகளில் எல்லாம் பாதுகாப்புப் பிரச்சினை இருக்கின்றதா? அல்லது ஜனாதிபதி முறையுள்ள நாடுகளில் பாதுகாப்புப் பிரச்சினை இல்லாமல் இருக்கின்றதா? ஆகவே மொட்டந்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதைத் தவிர்த்து இந்நாட்டின் சாபமாக உள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை முற்றாகச் களைந்து மக்களுக்கு நேரடியாகப் பொறுப்புக்கூறக் கூடிய சட்டத்தின் ஆட்சியைப் பலப்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும்.

நீதித் துறை, பொலிஸ் துறை மற்றும் பொது அலுவலகர் சேவை போன்ற அலகுகளின் சுயாதீனத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி சிந்திப்பதே நாட்டைப் பற்றி நேசிக்கும் ஒவ்வொருவரின் கடமையாகும்.

நீதித்துறை, பொலிஸ்துறை மற்றும் பொது அலுவலர் சேவையை ஒரே நிறைவேற்று ஜனாதிபதியின் மேற்பார்வையின் கீழ்க் கொண்டுவருவது பெரும் எதிர்விளைவுகளை எதிர்காலத்தில் உண்டாக்கும்.

இந்த அரசு இன்னும் 6 மாதங்களில் புதிய அரசியல் அமைப்பைக் கொண்டுவர உள்ளதாகத் தெரிவிக்கும்போது, இத்தகைய ஒரு சட்டத் திருத்தத்தை அவசர கதியில் கொண்டுவர முனைவதானது அவர்களுக்குப் பின்னால் இருக்கும் இரகசிய நிகழ்ச்சி நிரல் ஒன்று இருப்பதையே தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.-என்றுள்ளது. (க-இ)

# வட மாகாண ஆசிரியர்களின் சேவைக் காலத்தில் முறைகேடு

## அமைச்சர் டக்ளஸே காரணம் எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.23

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களது, சேவைக்காலம் அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட நியமனத் திகதியிலிருந்து சேர்த்துக் கொள்ளப்படவில்லை. சேவையாற்றிய 3 வருடங்கள், 6 வருடங்கள் கழித்தே அவர்களது சேவைக் காலம் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே காரணம் என்று பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு வட மாகாணத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டுடன், ஆசிரிய உதவியாளர் எனும் நியமனம் வழங்கப்பட்டது. நியமனம் கிடைத்து சேவையாற்றிய 6 வருட சேவைக் காலம் அவர்களது சேவைக் காலத்துடன் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

அதேபோன்று கடந்த 2013 ஆம் ஆண்டும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டுடன் வடமாகாணத்தில் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் சேவையாற்றிய 3 வருட சேவைக் காலம் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இதனால் பதவி உயர்வு, சம்பள ஏற்றம் போன்றவற்றால் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீடு இன்றி, வடமாகாணத்தில் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கு, அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட முதல் நியமனத் திகதியிலிருந்து அவர்களது சேவைக்காலம் கணிக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (க-426)

# வகுப்புக்கள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக, தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி வகுப்புக்கள், யாழ்ப்பாணம் கற்றல் நிலையத்தில் மறு அறிவித்தல் வரை இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-[illegible])

# தராகி சிவராம் கொலையுடன் லக்ஸ்மன் கதிர்காமர் தொடர்பு?

யாழ்ப்பாணம்,ஒக்.23

ஊடகவியலாளர் தராகி சிவராம் படுகொலைக்கான உத்தரவை, இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரே பிறப்பித்திருந்தார் என்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளது. முன்னணி ஆங்கில இணையமான தமிழ் நெட் இன் பிரதம ஆசிரியரும், தராகி சிவராமின் நெருங்கிய சகாவுமான ஜெயச்சந்திரன் இந்தத் தகவலை அம்பலப்படுத்தியுள்ளார்.

லக்ஸ்மன் கதிர்காமர் தனது சிபார்சை அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கவனத்துக்குக் கொண்டு சென்ற நிலையில், வழமையான அரச புலனாய்வு கட்டமைப்புக்கள் ஊடாக தராகி சிவராம் படுகொலை அரங்கேற்றப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வன்னியில் விடுதலைப் புலிகள் தலைமையுடனான சந்திப்பொன்றின்போது, சான்றுகளினதும் அரச புலனாய்வுக் கட்டமைப்புக்களது உள்ளக முகவர்களது தகவல்களின் அடிப்படையிலும் இதனை உறுதிப்படுத்தி அவர்கள் தெரிவித்திருந்தனர் எனவும் ஜெயச்சந்திரன் கூறியுள்ளார்.

முன்னைய ரணில் அரசுடனான, விடுதலைப்புலிகளது சமாதானப் பேச்சுக்களின்போது முகவராக செயற்பட்டு வந்திருந்த எரிக்சொல்ஹெய்மின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பிலான காணொலி உரையாடல் ஒன்றின்போதே ஜெயச்சந்திரன் இதனை அம்பலப்படுத்தியுள்ளார்.

அப்போதைய சூழலில் இலங்கை அரச புலனாய்வுப் பிரிவின் முகவர்களாகச் செயற்பட்டு வந்திருந்த தமிழ் துணை ஆயுதக்குழுக்களது, உறுப்பினர்கள் ஊடாக முன்னணி செயற்பாட்டாளர்கள் வேட்டையாடப்பட்டு வந்திருந்தனர்.

கடத்தல்கள் மற்றும் கொலைகள் அத்தகைய தரப்புக்களின் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டு வந்தன. அவ்வாறே இலங்கை அரச உயர்மட்ட பணிப்பின் பிரகாரம் தராகி சிவராம் கொழும்பு பம்பலப்பிட்டியில் கடத்தப்பட்டதுடன், இலங்கை நாடாளுமன்றுக்கு அருகில் கொல்லப்பட்ட பின்னர் சடலமாக வீசப்பட்டிருந்தார்.

2000 ஆம் ஆண்டு முதல் 2010 வரையான காலப் பகுதியில் 39 க்கும் அதிகமான தமிழ் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் இலங்கையில் கொல்லப்பட்டு அல்லது காணாமலோ ஆக்கப்பட்டிருந்தபோதிலும், கொலையாளிகள் எவரும் தண்டிக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. -(க-இ)



## இலங்கை - இந்திய கடற்படை கூட்டுப்பயிற்சிகள் நிறைவு

கொழும்பு,ஒக்.23

இலங்கை மற்றும் இந்தியக் கடற்படைகளுக்கு இடையில் 3 நாள்கள் இடம்பெற்ற கூட்டுப்பயிற்சி நிறைவடைந்தது.

எட்டாவது முறையாக நடத்தப்பட்ட கடற்படைப் பயிற்சியில், இலங்கை கடற்படைக் கப்பல் கஜபாஹு மற்றும் 'சயுர' ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல் ஆகியன பங்கேற்றன.

இந்தியக் கடற்படையைச் சேர்ந்த ஐ.என்.எஸ் கமோர்டா மற்றும் ஐ.என்.எஸ் கில்டான் கப்பல்கள், ஹெலிகொப்டர்களுடன் பங்கேற்றன.

கொவிட் 19 பரவுவதைத் தடுக்க வழங்கப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, இரு தரப்பிலும் கடற்படையினர்களுக்கிடையே தூரத்தை பராமரித்து பயிற்சிகள் நடத்தப்பட்டன. (க-இ)

## மரண வீட்டுக்குச் சென்றவர் நாடாளுமன்றுக்கு வருகை

### அமர்வில் பதற்றம்

கொழும்பு,ஒக்.23

காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சம்பத் அத்துகோரள, பலப்பிட்டிய பிரதேசத்தில் மரண வீடொன்றுக்குச் சென்றிருந்தார்.

அவர் நாடாளுமன்றுக்கு நேற்று வருகை தந்தமையால் உறுப்பினர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தகவலை நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

அந்த மரண வீட்டுக்குச் சென்ற அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். சம்பத் அத்து கோரள மட்டும் தனிமைப்படுத்தலுக்குச் செல்லாமல், நாடாளுமன்றுக்கு வருகை தந்துள்ளார் என்று மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பில், சுகாதாரப் பிரிவினரின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார். (க-இ)

## சிகிச்சைக்குச் சென்ற இருவருக்கு கொரோனா

கொழும்பு,ஒக்.23

முல்லேரியா மருத்துவமனையில் சிகிச்சை பெறச் சென்ற இருவருக்கு, கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் இதனைத் தெரிவித்துள்ளது.


உடுமுல்ல மற்றும் மாளிகாகொடல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவர், சிகிச்சைக்காக முல்லேரியா மருத்துவமனைக்கு வருகைத்தந்த போது, அவர்களுக்கு மருத்துவமனையில் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட போது, தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (க-இ)

## ஒரே குடும்பத்தில் ஐவருக்கு கொரோனா

கொழும்பு,ஒக்.23

வலல்லாவிட்ட பிரதேச செயலகப் பிரிவில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், கொழும்பு துறைமுகத்தில் பணியாற்றுகிறார்.



அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அவரது குடும்பத்தினருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது, 6 மாதக் குழந்தை உள்ளிட்ட ஐவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (க-இ)



## 18 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி

மன்னார்,ஒக்.23

மன்னார் பட்டிதோட்டம் கிராமத்தில், கொரோனா அச்சம் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த 18 குடும்பங்களுக்கு, உலர் உணவுப்பொருள்கள் மற்றும் முகக் கவசங்கள் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் வேண்டுகோளுக்கு அமைவாக, மன்னார் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தால் இவை வழங்கப்பட்டன. (க-56)

## இணையவழி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.23

குறிஞ்சி யாழ்.கலை இலக்கிய பண்பாட்டு மையம் இணைந்து நடத்தும், கவிஞர் கார்த்தியின் 'நிலவுக்கு கீழே ஆகாயம்' இணையவழி நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம்பெறும்.

நிகழ்வில் 310 814 0829 (meeting ID) (password) 123456 என்ற கடவுச் சொல் மூலம் இணைய வழியூடாகவும் KURINJI SINTHANAI என்ற யூடியூப் ஊடாகவும் KURINJI & Nandakumar Arumugam என்ற பேஸ்புக் லைவ் (Facebook live) ஊடாகவும் கலந்துகொள்ள முடியும். (க-159)

## வெளியில் நடமாடாதீர்!

முல்லைத்தீவு,ஒக்.23

முள்ளியவளை பிரதேச மக்களுக்கு, கொரோனா தொடர்பான விழிப்புணர்வு அறிவிப்பை பொலிஸார் வழங்கி வருகின்றனர்.

தேவையில்லாத கூட்டங்கள் கூடுவது மற்றும் வெளியில் நடமாடுவதைத் தவிர்க்குமாறு, கிராமங்கள் தோறும் அறிவித்து வருகின்றனர். (க-19)

# புதிய அரசமைப்பை இயற்றும் பணி ஆரம்பம்

## 6 மாதங்களுக்குள் நிபுணர்கள் குழுவின் அறிக்கை கிடைக்கும் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஒக்.23

புதியதொரு அரசமைப்பை இயற்றுவதற்கான பணி ஆரம்பமாகிவிட்டது. '20'ஆவது திருத்தமூலம் தற்காலிக ஏற்பாடு மாத்திரமே. முழுமையானதொரு அரசமைப்பு நிச்சயம் உருவாக்கப்படும் என்று சட்டத்துறை பேராசிரியரும் அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் பிரகாரம் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. தேர்தல் ஆணைக்குழுவிலுள்ள உறுப்பினர் ஒருவர் பக்கச்சார்பான முறையில் செயற்பட்டார். அவரிடம் சுயாதீனம் இருக்கவில்லை. தேர்தலை நடத்தவேண்டிய இடத்தில் இருந்து கொண்டு தேர்தலுக்கு எதிராக நீதிமன்றம் சென்றார். இவ்வாறு 19இல் பல குறைபாடுகள் உள்ளன. அச்சட்டம் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது.

ஜே.ஆர்.ஜயவர்தன ஆட்சிகாலத்தில் கொண்டுவரப்பட்ட அரசமைப்பு இந்த நாட்டில் 42 வருடங்களாக அமுலில் உள்ளது. அரசமைப்பு என்பது கல்வெட்டு அல்ல, கால வோட்டத்துக்கேற்ப சமூகத்தின் வளர்ச்சிக்கேற்ப அது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

அந்தவகையில் புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக 9 பேரடங்கிய நிபுணர் குழுவை அமைத்துள்ளோம். அக்குழுவின் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. 6 மாதங்களுக்குள் வரைவு நகலை வழங்குவதாக குழுவின் தலைவர் அறிவித்துள்ளார்.

எனவே, 20 என்பது தற்காலிக ஏற்பாடு. அதனை ஒத்திவைக்கமுடியாது. அரசமைப்பு மறுசீரமைப்புக்கான ஆரம்பமாகக்கூட எடுத்துக்கொள்ளலாம். முழுமையானதொரு அரசமைப்பு நிச்சயம் உருவாக்கப்படும்' என்றார். (ம44)

## சிறுவர் துஷ்பிரயோகம்: மூவருக்கு கடூழியச்சிறை

மட்டக்களப்பில் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட மூவருக்கு கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது மட்டக்களப்பு மேல்நீதிமன்று.

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய 64 வயதுடையவருக்கு 9 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஓர் இலட்சம் ரூபா இழப்பீடு செலுத்தவும் உத்தரவிடப்பட்டது. மட்டக்களப்பு ஏறாவூரில் சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியவருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஓர் இலட்சம் ரூபா இழப்பீடு செலுத்த வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இதேவேளை வாழைச்சேனையில் சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியவருக்கு 2 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு ஓர் இலட்சம் ரூபா இழப்பீடு செலுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (த-இ)

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ் நகரை அண்மித்த 3 km சுற்றாடலுக்குள் வீடு வாடகைக்கு தேவை.
4 Bed Room, Car Parking உடன்.
தொடர்பு: 078 141 6452

**வாகனம் வாடகைக்கு தேவை**

சாவகச்சேரியிலுள்ள மிக்சர் கம்பனிக்கு மாத வாடகைக்கு சிறிய பட்டா ரக வாகனம் வாடகைக்கு தேவை.
076 155 5536

**தவறவிடப்பட்டுள்ளது**

யாழ்ப்பாணம், வைரவர் கோயில் பஸ்தரிப்பு நிலையத்தில் கடந்த (20.10.2020) செவ்வாய்க்கிழமை அன்று இரண்டு தேசிய அடையாள அட்டை தவறிடப்பட்டுள்ளது.
கந்தையா தருமலிங்கம் (450471666V).
கதிரவேலு இரத்தினபூதி (194970510025) சன்மானம் வழங்கப்படும்.
077 460 8696

# புலிகள் மீதான தடை பிரிட்டனில் தொடரும்

## பிரதமர் மஹிந்த நம்பிக்கை



கொழும்பு, ஒக்.23

"தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை பிரிட்டன் அரசு தொடர்ந்தும் பேணி வரும் என்று நம்புகின்றேன்".

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பிரிட்டனின் தடை தவறானது எனப் பிரிட்டன் தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் மேன்முறையீட்டு ஆணைக்குழு நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கியிருந்தது. அது தொடர்பாக நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் உள்ளதாவது;

இலங்கையானது தமிழீழ விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து அதன் மிருகத்தனமான பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஆனால், தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் உலகம் முழுவதும் மிகவும் சுதந்திரமான செயற்பாடுகளில் உள்ளன. அத்துடன், இவை எந்தவொரு நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கின்றன.

இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையைப் பிரிட்டன் அரசு தொடர்ந்தும் பராமரிக்கும் என நம்புகின்றேன்" என்றுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பிரிட்டனின் தடைக்கு எதிராக நாடு கடந்த தமிழீழ அரசால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் குறித்த வழக்கின் தீர்ப்பு நேற்றுமுன்தினம் வெளியாகியிருந்தது.

"தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பிரிட்டனின் தடை தவறானது" எனப் பிரிட்டன் தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் மேன்முறையீட்டு ஆணைக்குழு தீர்ப்பளித்துள்ளது. அத்துடன், பிரிட்டன் அரசுக்கும் இறுதி முடிவுக்காகப் பரிந்துரைத்துள்ளது.

அதனடிப்படையில், பிரிட்டன் அரசின் முடிவு அடுத்த சில வாரங்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் இலங்கை அரச தரப்பிலிருந்து இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஏ-22)

**STATE MINISTRY OF RURAL HOUSING & CONSTRUCTION AND BUILDING MATERIALS INDUSTRY PROMOTION**

**DEPARTMENT OF BUILDINGS**

**INVITATION FOR BIDS**

**ADDITIONAL ADMINISTRATIVE BLOCK AT NALLUR DIVISIONAL SCERETARIAT-STAGE4**

1. **The Chairman, Regional Procurement Committee,** on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for "Proposed Additional Administrative Block at Nallur Divisional Secretariat, Jaffna-Stage 4" as described below and estimated cost RS.6.49 million (Excluding VAT). The construction period is **60 days.**
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure .Since the Total Cost Estimate of this Procurement is below Rs.50 Mn.Regional preference and CIDA grade preference shall apply as stipulated in public Finance Circular No.04/2016(ii)
3. To be eligible for contract award, the successful bidder/bidders shall not have been blacklisted and shall be registered in the field of building construction for Grade C7 or above with the Institute for Construction industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings,** and inspect the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**
   Contact numbers are: Phone: 021 - 2222781, Facsimile: 021 - 2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** from **23.10.2020 until 03.11.2020** from **9:00hrs to 15:00 hrs upon payment of Non-refundable fee of Rupees Two Thousand & Five Hundred only(Rs.2,500/-)**
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** to reach on or **before 10.00 hrs on 06.11.2020.** Bids will be opened soon after closing at the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** in presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of 91 Days from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 of the bidding document
   - in favour of **Director General of Buildings.**
   - **for an amount of Rs.130,000.00**
   - valid up to **05.02.2021.**
   - issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.

**Eng. A.Nawas Atham,**
Director (R2)
Department of Buildings,
2nd Floor,"Sethsiripaya",
Battaramulla.

# கொழும்பின் சில பகுதிகள் முடக்கம்

கொழும்பு, ஒக். 23
கொரோனாப் பெருந்தொற்றின் கொத்தணிப் பரவல்கள் இனங்காணப்பட்டதை அடுத்து கொழும்பின் சில இடங்கள் நேற்று முடக்கப்பட்டுள்ளன. இராணுவத்தளபதிலெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா இதனை தெரிவித்துள்ளார்.
மட்டக்குளி, புளுமெண்டல், கிராண்பாஸ், மோதர மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பகுதிகளுக்கே இவ்வாறு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள் ளது.
எதிர்வரும் திங்கட்கிழமை வரை இந்த ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
கொத்தணிப் பரவல்கள் மேலும் பரவலடையலாம் என்ற அச்சத்திலேயே கொழும்பின் மேற்படி பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன. (ம-இ)

# கொரோனாத் தடுப்பூசி விரைவில் இலங்கைக்கு!


கொழும்பு.ஒக்.23
இலங்கைக்குவிரைவில்கொரோனாவைரஸுக்குப்பயன்படுத்தும்தடுப்பூசிகொண்டுவரப்படும்என்று தேசியமருந்து ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது.
சீனா, பிரிட்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவால்பரீட்சித்துப்பார்க்கப்படும்கொரோனாதடுப்பூசிக்கு, உலகசுகாதாரஅமைப்பின்அனுமதிகிடைத்தவுடன் உடனடியாக இலங்கைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.
உலகில் 10 நாடுகள் இதுவரையில் தடுப்பூசி தயாரிக்கும் நோக்கில் ஆய்வுகளை மேற்கொள்கின்றன என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.
எனினும்சீனா, பிரிட்டன் மற்றும்அமெரிக்காதயாரித்துள்ள தடுப்பூசிகள்உரியமட்டத்துக்குமேல்உள்ளனஎன்றுதேசிய மருந்துஒழுங்குமுறைஆணையத்தின்தலைவர்பேராசிரியர் அசித டிசில்வா தெரிவித்துள்ளார்.
அந்தத் தடுப்பூசிகளுள் சீனா மற்றும் பிரிட்டன் தயாரிக்கும் தடுப்பூசி, வெகுவிரைவில் இலங்கைக்குகிடைக்கும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
இதேவேளை, உலக சுகாதார அமைப்பின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ள சீனாவின் கொரோனா தடுப்பூசியைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு 60 ஆயிரம் பேர் தன்னார்வமாக முன்வந்துள்ளனர்.
அந்தநபர்கள்10நாடுகளைச்சேர்ந்த125இனத்தைச்சேர்ந்தவர்கள்என்று கொழும்பில்உள்ளசீனத்தூதரகம்தெரிவித்துள்ளது. மூன்றாம்கட்டதடுப்பூசிசோதனையில்எவருக்கும் மிகப்பெரியஉபாதைகள்ஏற்படவில்லைஎன்றுதெரிவிக்கப்படுகின்றது. (க-இ)

# எவருக்கும் தொற்றில்லை

கிளிநொச்சி, ஒக். 23
கிளிநொச்சியில் தங்கியிருந்த 30 பேரினது மாதிரிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டதில்எவருக்கும்கொரோனாத்தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்டபிராந்தியசுகாதாரசேவைகள்பணிமனைத்தகவல்கள் தெரிவிக்கின்றன
கிளிநொச்சிமாவட்டத்தில்மேற்கொள்ளப்பட்டுவரும்வீதிஅபிவிருத்தி பணிகளுக்காக வருகை தந்திருந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த 30 பேருக்கு முதல் கட்டமாக இவ்வாறு பரிசோதனை இடம்பெற்றுள்ளது. தர்மபுரத்தில் அமைந்துள்ள மாகா நிறுவனத்தில் தொழிலின் நிமித்தம் வருகை தந்து தங்கியுள்ள 30 பேருக்கே இவ்வாறு கடந்த திங்கட்கிழமை மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன. குறித்த மாதிரிகளில் எவருக்கும் தொற்று இல்லை என கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவிக்கப்பட்டது. (ம-6)

# நாடாளுமன்றில் அமெரிக்க கொடி

கொழும்பு.ஒக்.23
அமெரிக்காவிலும், இலங்கையிலும் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கு வழி வகுக்கும் வகையிலேயே '20' ஆவது திருத்தச்சட்ட வரைவுமுன்வைக்கப்பட்டுள்ளதுஎன்றுஐக்கியமக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில்நேற்று நடைபெற்றஅரசமைப்பின் '20' ஆவது திருத்தச்சட்ட வரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயேஅவர்இதனைத் தெரிவித்தார். அத்துடன், அமெரிக்க குடியுரிமையை பெறுவதற்காக ஒருவர் எவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும் என்பதை சபையில் வாசித்துக்காட்டினார்.
அவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்பவர்கள் இந்தக் கொடிக்குகட்டுப்படவேண்டும்எனக்குறிப்பிட்டு'அமெரிக்க தேசியக்கொடியை' சபையில் காண்பித்தார்.
எதிர்காலத்தில் சீனர்களும் நாடாளுமன்றம் வரக்கூடும் எனவும்அவர்சுட்டிக்காட்டினார். 20ஊடாகநாடுஏதேச்சா



திகாரத்தைநோக்கிப்பயணிக்கும்எனத்தெரிவித்த அவர், 20க்கு ஆதரவு வழங்கும் இடதுசாரி தலைவர்களையும் கடுமையாக விமர்சித்தார்.
அதேவேளை, இதற்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர், நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தை மீறும் வகையிலேயே இந்தக் கொடியைக்கொண்டுவந்தார்எனவும்சாடினர். (க-44)

# விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக். 23
தற்கொலை குண்டுதாரி சஹ்ரான் காசினின் மனைவி உள்ளிட்ட 7 பேரையும் நவம்பர் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து கோட்டை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சஹ்ரானின் மனைவி அப்துல் காதர் பாத்திமா காதியா முதல் முறையாக நேற்று முற்பட்டார்.
இன்றும் அவர் ஆணைக்குழுவில் முற்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# பெண் உறுப்பினர்கள் இரண்டு பேர் சுன்னாகம் சபையில் போர்க்கொடி

## ஒருவர் நிலத்தில் அமர்ந்து போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 23
பிரதேசசபையில்நிதிஒதுக்கீடுகளின்போதுவட்டாரஉறுப்பினர்கள் விகிதாசாரஉறுப்பினர்கள்என்றபாகுபாடுவேண்டாம்என்றுகோரி யாழ்ப்பாணம் வலி,தெற்கு பிரதேசசபையில் நேற்று இரண்டு பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
ஒரு பெண் நிலத்தில் அமர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டார்.
சபையின் (சுன்னாகம்) அமர்வு நேற்று தவிசாளர் தலைமையில் நடைபெற்றது.
உறுப்பினர்களுக்கான பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் வட்டார விகிதாசார. உறுப்பினர்கள் என பாகுபாடு காட்டி நிதி ஒதுக்க வேண்டாம் என்று கூறிய ஈ.பி.டி.பியின் பெண் உறுப்பினர் விகிதாசார உறுப்பினரான தனக்கும் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றுகோரினார். எனினும், அதற்கு உள்ளூராட்சி சட்ட நடைமுறையில் இடமில்லை என்று தவிசாளர் கூறினார்.
இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெண் உறுப்பினர் ஒருவர் சபை அமர்வின்போது தரையில் அமர்ந்து போராட்டம் நடத்தினார்.
தனது பகுதியில் மின்குமிழ்கள் பொருத்தப்படவேண்டும் என்றும் அவற்றைவழங்கவேண்டும்என்றும்அந்தஉறுப்பினர்கோரிக்கை விடுத்தார். ஒதுக்கீடுகள் யாவும் விகிதாசார உறுப்பினர்களுக்கே என்று சபையில் கூறப்பட்டதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. உறுப்பினர் என்று இருக்கும்போது தனக்கும் ஒதுக்கீடுகள் வேண்டும் என்று கோரினார். இறுதியில் அவரது பகுதிக்கு மின்குமிழ்கள் வழங்க நடவடிக்கை எடுப்பதாக தவிசாளர் கூறினார். அதன்பின்னர் சுமார் அரை மணித்தியாலமாக நிலத்தில் அமர்ந்திருந்து மேற்கொண்ட போராட்டத்தை நிறைவுசெய்தார் அந்தப் பெண் உறுப்பினர். (த)


**வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் 2021**

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி :- 02.11.2020 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 02.11.2020 திங்கட்கிழமை பி.ப 02.30 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 02.11.2020 திங்கட்கிழமை பி.ப 3.00 மணி

| இல | குத்தகைவிபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 50,490.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல – 06 | 1,500.00 | 44,550.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல – 07 | 1,500.00 | 21,915.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடை | 1,000.00 | 9,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | ...... | 109,080.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 653,400.00 | 10,000.00 | 1,000.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 99,495.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,250.00 | 527,040.00 | 10,000.00 | 1,000.00 |
| 09 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 1,250.00 | 595,170.00 | 10,000.00 | 1,000.00 |
| மயிலிட்டி உப அலுவலகம் | | | | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை | .......... | 312,300.00 | 1000.00 | 1000.00 |
| 02 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 566,280.00 | 10,000.00 | 1,000.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 18,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 9,900.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | குரும்பசிட்டி சந்தை | .......... | 10,080.00 | 1000.00 | 1000.00 |
| 06 | குரும்பசிட்டி கோழிக்கடை | 1,000.00 | 36,180.00 | 1000.00 | 1000.00 |
| காங்கேசன்துறை உப அலுவலகம் | | | | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | .......... | 67,500.00 | 1000.00 | 1000.00 |

**குறிப்பு** : மேலதிக விபரங்களை 07.10.2020ஆம் திகதி (புதன்கிழமை) பிரசுரமான வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி), பொதுச்சந்தைகள். இறைச்சிக்கடைகள். கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு /வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2021 விளம்பரத்தில் பார்வையிடவும்.

**சோமசுந்தரம் சுகிர்தன்.**
**தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச்சபை.**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி).**

23.10.2020

# மனிஷ் பாண்டே காட்டடி
# ராஜஸ்தானை வீழ்த்தியது ஹைதராபாத்




நேற்றிரவு நடைபெற்ற ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் 40ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தானை 8 விக்கெட்க ளால் வீழ்த்தியது ஹைதராபாத்.

டுபாயில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சி யில் வெற்றி பெற்ற ஹைதராபாத் அணி முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு உத்தப்பா,பென் ஸ்டோக்ஸ் இணை ஆரம்பம் வழங்கியது. அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்த உத்தப்பா 19 ஓட்டங்களுடன் நடையைக்கட்டினார். எனினும் ஸ்டோக்ஸுடன் ஜோடி சேர்ந்த சாம்சன் அதிரடி காட்டினார். அணி 86 ஓட்டங் களைப் பெற்ற வேளை சாம்சன்(36), ஸ்ரோக்ஸ்(30) ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழக்க, அடுத்து வந்த பட்லர் 9 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். தொடர்ந்து மத்தியவரிசையில் ஸ்மித்(19),ரியான் பராக்(20) ஓட்டங் களுடன் ஹோல்டரின் பந்துவீச்சில் அடுத்தடுத்து பவி லியன் திரும்பினர். இறுதியில் இருபது ஓவர்கள் நிறைவில் ராஜஸ்தான் அணி 6 விக்கெட் இழப்புக்கு 154 ஓட்டங்களை பெற ஆர்ச்சர்(16), ராகுல் திவா தியா(2) ஓட்டங்களுடன் களத் தில் இருந்தனர். பந்துவீச்சில் ஹோல்டர் 3 விக்கெட்களை யும் விஜய் சங்கர்,ரசிட்கான் தலா ஒரு இலக்கையும் கைப் பற்றினர்.




155 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங் கிய ஹைதராபாத் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து டேவிட் வோர் ணர் (4), பயர்ஸ்ரௌவ் (10) ஆகியோரை பவிலியன் அனுப்பினார் ஆர்ச்சர். எனினும் அடுத்து ஜோடி சேர்ந்த மனிஷ் பாண்டே, விஜய்சங்கர் இணை ராஜஸ்தான் அணியின் பந்துவீச்சாளர்களை கதிகலங்க வைத்தனர். விஜய் சங்கர் ஒருபுறம் நிதானிக்க மறுபுறம் மனிஷ் பாண்டே சிக்ஸர் பவுண்டரிகளாக பந்துகளை தெறிக்க விட்டார்.

1.5 ஓவர்கள் மீதமிருக்க ஹைதராபாத் அணி வெற்றி யிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் மனிஷ் பாண்டே 47 பந்துகளில் 8 சிக்ஸர்கள் 4 பவுண்டரிகள் அடங்க லாக 83 ஓட்டங்களையும் விஜய் சங்கர் 52 ஓட்டங்க ளையும் பந்துவீச்சில் ஆர்ச்சர் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மனிஷ் பாண்டே தெரிவு செய்யப்பட்டார். இன்றைய ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் சார்ஜா மைதானத்தில் மோதுகின்றன.





## மரண அறிவித்தல்



தோற்றம்
13 • 07 • 1938

மறைவு
22 • 10 • 2020

### நாகலிங்கம் பரமலிங்கம்

(ஓய்வுபெற்ற இ.போ.சபை லிகிதர்)

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பரமலிங்கம் 22.10.2020 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - இலக்குமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதி அம்மாவின் அன்புக் கணவரும், துஷ்யந்தி (லண்டன்), ஸ்ரீஜெயந்தி (ஆசிரியர் - யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), கிரிசாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்), பிரசாந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தகுமார் (லண்டன்), அகிலன் (உதவி முகாமையாளர் மக்கள் வங்கி - சங்கானை), உமாசங்கர் (சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் - யாழ். பகல்கலைக்கழகம்), தயாரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யானிகா, கர்னிக்கா, ஆரபி, ஆரூரன், அரங்கன், நிருஷா, நிலக்ஷா, டிலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் (37, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

37, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

077 506 3462, 076 472 9177



## மரண அறிவித்தல்



### சீனியர் குருசாமி

கோண்டாவில் குமரகோட்டத்தினை பிறப்பிடமாகவும், உடுவில் தெற்கு பாலாவோடையை வதிவிடமாகவும் கொண்ட சீனியர் குருசாமி நேற்று (22.10.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வீரவாகு, பாலசிங்கம், நல்லம்மா ஆகியோரின் சகோதரனும், சந்திரவதனி, இந்திரவதனி, எழில்வதனி, சர்வேஸ்வரன், கஜேந்தினி (ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோடீஸ்வரன், கருணாகரன், பாவேந்தன் (Srilanka Telecom), மயூரன் (கொக்குவில் தபாலகம்) ஆகியோரின் மாமனாரும், புஸ்பராணி காலஞ்சென்ற சிவகுருநாதன், சண்முகநாதன், பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தர்னிகா, கபிசனா, ஹர்சனா, துளசிகன், அகானா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.




## மூன்றிலிரண்டுடன்...

நீதி அமைச்சர் அலி சப்ரியால் சபையில் நேற்றுமுன்தினம் காலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த 20ஆவது திருத்தச் சட்ட வரைவு மீது இரண்டு நாள்கள் விவாதங்கள் நடைபெற்றன. நேற்றிரவு 20ஆவது திருத்தச் சட்ட வரைவு மீது பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

திருத்தத்துக்கு ஆதரவாக 156 பேரும், எதிராக 65 பேரும் வாக்களித்தனர். எதிரணியைச் சேர்ந்த 8 பேர் நேற்றுக் கட்சி மாறி 20க்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, '20' திருத்தத்தைப் புறக்கணித்து வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. எனினும், அவர் தலைமையிலான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் '20'க்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அதேவேளை, 20ஆவது திருத்தத்துக்கு எதிராக ஆளுந்தரப்பில் இருந்துகொண்டே பகிரங்கமாகக் கருத்துக்களை வெளியிட்டு வந்த ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்சவும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

156 பேர் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு ஆதரவாக வாக்களித்தமையால் இந்தச் சட்ட வரைவு சபையில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உத்தியோகபூர்வமாக அறிவித்தார். (எ-22,44)

## எட்டு பேரின்...

மைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக நேற்று வாக்களித்தனர்.

எதிரணியைச் சேந்த 8 பேரின் ஆதரவுடனேயே '20' திருத்தம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் (156) நேற்று நிறைவேறியது. இல்லையேல் ஆளுந்தரப்பில் 148 பேரின் ஆதரவுடன் மட்டும் 150 என்ற இலக்கைத் தொடாது '20' பிசுபிசுத்திருக்கும்.

முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நஸீர் அஹமட், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், பைசல் காசீம், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌஃபீக் ஆகியோர் 20க்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரான அ.அரவிந்குமார் 20க்கு ஆதரவாக வாக்களித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகேவும் '20'க்கு ஆதரவாக வாக்களித்தார். (எ-22,44)

## அரசு பக்கம்...

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் நேற்று அரசின் பக்கம் தாவினர். அதேவேளை, ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் அரசுக்கு ஆதரவளித்துள்ளனர்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் நேற்று பெரும்பான்மையுடன் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. எதிரணியில் இருந்த 8 உறுப்பினர்கள் நேற்று அரசின் பக்கம் தாவி, ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

நேற்றுமுன்தினம்வரை கமுக்கமாக இருந்த மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர்கள் 4 பேர் நேற்று அரசின் பக்கம் தாவினர்.

ஒவ்வொரு அரசுகளும் பதவியேற்கும் போதும் அமைச்சுப் பதவிகளை வகித்து வந்த முஸ்லிம் காங்கிரஸ், தற்போது எதிர்த்தரப்பில் இருக்கின்றது. அரசு நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்க முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வலை வீசுகின்றது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாய்ச்சலுக்கு, பெட்டிகள் கைமாற்றமே காரணம் என்று கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகின்றது. தங்கள் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்தக் கட்சி தாவல் நடவடிக்கைகள் தலைமைகளுக்கும் தெரிந்திருக்கும் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

அதேநேரம், ரிஷாத் பதியுதீன் தற்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். பொலிஸார் கடும் சிரத்தை காட்டி சில தினங்களுக்கு முன்னர் அவரைக் கைது செய்திருந்தனர். இந்தப் பின்னணியிலேயே அவரது கட்சியினர் அரசுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். (எ)

## மனோ கட்சி...

ளித்துள்ளார்..

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அ. அரவிந்குமார் கட்சியின் உயர்பீட உறுப்பினராவார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏனைய 5 உறுப்பினர்களும் 20க்கு எதிராக வாக்களித்தனர். (எ)

## வாள்களுடன்...

மாலை 4.30 மணியளவில் நடந்துள்ளது. முகத்தை மூடி மறைத்து வாள்கள், கோடரி என்பவற்றுடன் வந்த 3 பேரே தாக்குதல் நடத்தியுள்ளனர். குடும்பத் தலைவரையும், அங்கிருந்த பெண்ணையும் தாக்கிய பின்னர், வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் சேதப்படுத்திவிட்டு அந்தக் கும்பல் தப்பியோடியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெல்லிப்பளைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-26)

## 82 கிலோ...

லாம் என்று நம்பப்படும் 82 கிலோ கஞ்சா பருத்தித்துறை கடலில் நேற்று மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் 3 பேர் பருத்தித்துறை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடற்படையினர் வழமையான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, படகொன்றைச் சந்தேகத்தின் அடிப்படையில் சோதனையிட முயன்றுள்ளனர். அப்போது படகில் இருந்தவர்கள் பொதி ஒன்றைக் கடலில் வீசிவிட்டுத் தப்பியோட முயன்றுள்ளனர். அவர்களைக் கைது செய்த பொலிஸார், அவர்கள் கடலில் எறிந்த பொதியையும் மீட்டுள்ளனர். அதில் 82 கிலோ கஞ்சா பொதி செய்யப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒருவர் மருதங்கேணியைச் சேர்ந்தவர் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் பருத்தித்துறைக் கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்களுடன் பழகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதால் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்களைப் பெற்று மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கடற்படையினர் தெரிவித்தனர். (எ-26)

## தாய் முறைப்பாடு...

லாத வீட்டில் நகைகள், பணம் திருடப்பட்டிருந்தது என்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பில் அந்த வீட்டைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீட்டில் தாயும், மகனும் மட்டுமே வசிக்கும் நிலையில், நேற்றுப் பகல்வேளை தான் வெளியே சென்றிருந்த நேரம் வீட்டில் நகை, பணம் திருட்டு போயிருந்தது என்று நெல்லியடி பொலிஸில் தாய் முறைப்பாடு செய்திருந்தார். 4 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், ஒரு தொகைப் பணம் என்பனவே திருடப்பட்டன என்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். விசாரணைகளில் மகனே இந்தத் திருட்டில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது. அதையடுத்து மகன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து நகைகள் மற்றும் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-26)

## குளவி கொட்டி..

சாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

56 வயதுடைய இராமசாமி நடேசஐயர் என்ற விவசாயியே உயிரிழந்தவராவார். குளவி கொட்டியதில் மயக்கமடைந்த விவசாயி மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். எனினும் அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முன்னரே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-19,113)

## கிணற்றில்....

லையில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

தொண்டைமானாறு, கெருடாவிலைச் சேர்ந்த ராமு பிள்ளையார் (வயது76) என்பவரே உயிரிந்தவராவார்.

இவர் தொடர்ச்சியாக நெஞ்சுவலியால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும், அது தாங்காது அவர் கடந்த 11ஆம் திகதி கிணற்றில் குதித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவர் உடனடியாக ஊறணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு கடந்த 12ஆம் திகதி அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## கொரோனா...

குளியாப்பிட்டியவைச் சேர்ந்த 50 வயதான பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார். இவர் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில், கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார்.

எனினும் அவர் சிகிச்சை பயனன்றி நேற்று மாலை உயிரிழந்தார். இவருடன் சேர்த்து நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14ஆக உயர்ந்துள்ளது. (எ-22)

# பருத்தித்துறை மீனவர் மீது கடலில் வைத்துத் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக்.23

பருத்தித்துறை நாகர்கோயில் கடற்பரப்பில் வைத்து வெளிமாவட்ட மீனவர்கள் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவித்து இரு மீனவர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

தாக்குதலில் பாதிக்கப்பட்ட அவர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. பருத்தித்துறை எரிஞ்ச அம்மன் கோயில் பகுதியைச் சேர்ந்த மீனவர்களே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

முகங்களை மறைத்தவாறு மூன்று படகுகளில் வந்த 9 பேரே தாக்குதல் நடத்தினர் என்றும், நீங்கள்தானே எம்மைக் கடலட்டை தொழில் செய்ய விடாது தடுத்தது? என்று கேட்டுத் தாக்கினர் என்றும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர். அத்துடன் அவர்களை இரவு 7 மணியில் இருந்து அதிகாலை 2 மணிவரையில் தடுத்து வைத்திருந்து தாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இரு மீனவர்களிடம் இருந்த சுமார் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான ஜி.பி.எஸ். கருவி, நங்கூரம் உட்பட வேறு சில பொருள்களையும் அவர்கள் பறித்துச் சென்றனர் என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

படகுகளில் கரை திரும்பிய மீனவர்கள் இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-26,160)


# கொரோனாத் தடுப்பூசிக்கு 184 நாடுகள் பங்களிப்பு

## உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு



**ஜெனிவா, ஒக்.23**
**உலக சுகாதார அமைப்பு தயாரிக்கவுள்ள இக்வெக்ஸ் கொரோனாத் தடுப்பூசிக்கு 184 நாடுகளின் பங்களிப்புக்கள் கிடைத்துள்ளன என அவ்வமைப்பு அறிவித்துள்ளது.**

கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியைத் தயாரிப்பதற்கும் அதனை விநியோகிப்பதற்குமான பொறுப்பை உலக சுகாதார அமைப்பும் யுனிசெப் அமைப்பும் ஏற்றுள்ளன. இதற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளை இக்வெக்ஸ் அணியின் 184 உறுப்பு நாடுகள் ஊடாக பெறப்படும்.
உலக வல்லரசுகள் மற்றும் மிகவும் வறுமைக்கு உட்பட்டுள்ள நாடுகளில் மிகவும் நியாயமான முறையில் இத்தடுப்பூசியை விநியோகிப்பதே எமது நோக்கம் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் எட்னோம் தெரிவித்துள்ளார்.
கொரோனா வைரஸுக்கு எதிராக தயாரிக்கப்படும் தடுப்பூசியில் இரண்டு பில்லியன் தடுப்பூசிகளை 2021ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதும் 170 நாடுகளுக்கு விநியோகிக்க முடியும் என யுனிசெப் அமைப்பு அறிவித்துள்ளது. இதேவேளை ஐரோப்பிய சங்கத்துக்குரிய நாடுகள், சீனா, லத்தீன் அமெரிக்கா, தென்னாபிரிக்கா மற்றும் ஈரான் , ஈராக் உள்ளிட்ட 184 நாடுகள் இக்வெக்ஸ் குழுவுக்கு நிதி பங்களிப்பை வழங்குவதுடன் இதில் தொடர்புபடுவதற்கு தனக்கு எவ்வித எண்ணமும் இல்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. (வ-இ)



## ஹமாஸ் இலக்குகள் மீது இஸ்ரேல் தாக்குதல்

முற்றுகையில் உள்ள காசா பகுதியில் ஹமாஸ் இலக்குகள் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் வான் தாக்குதல் நடத்தியுள்ளன. பலஸ்தீன ஹமாஸ் குழுவுக்கு சொந்தமான சுரங்கப் பாதைகளை இலக்கு வைத்து செவ்வாய் இரவு இந்த வான் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர் ருவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். எனினும் கான் யூனிஸ் மற்றும் டெயிர் அல் பலாஹ்வில் இரு விவசாய நிலங்கள் மீதே மூன்று ஏவுகணைகள் விழுந்தன என அதனைப் பார்த்த பலஸ்தீனர்கள் தெரிவித்துள்ளனர்.
முன்னதாக கான் யூனிஸ் பகுதியில் இருந்து வீசப்பட்ட ரொக்கெட் குண்டு ஒன்று இடைமறிக்கப்பட்டது என இஸ்ரேல் இராணுவம் கூறியது.
இந்த இரண்டு தாக்குதல் சம்பவங்களில் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் எந்த விபரமும் வெளியாகவில்லை. காசாவின் அனைத்து தேவையான வர்த்தகப் பொருள்களும் சுரங்கப் பாதை ஊடாகவே எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## பட்டியலில் சூடானை நீக்கியது அமெரிக்கா



வொஷிங்டன், ஒக்.23
பயங்கரவாதத்துக்கு அரச ஆதரவு வழங்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து சூடான் நீக்கப்படுகிறது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.
சூடானின் புதிய அரசாங்கம், பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் இழப்பீடு வழங்க இணங்கியுள்ளது.
புதிய அரசாங்கத்தின் கீழ், சூடான் முன்னேற்றமடைந்து வருகிறது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.
இந்நிலையில், சூடானால் அமெரிக்காவுக்கு செலுத்தப்படவிருந்த 335 மில்லியன் ரூபா நஷ்டத்தொகை தற்போது செலுத்தப்பட்டுள்ளது என சூடான் பிரதமர் அப்தல்லா ஹம்டொக் தெரிவித்துள்ளார். (வ-இ)



## சிறைச்சாலை மீது தாக்குதல்; 1,300 கைதிகள் தப்பியோட்டம்

கொங்கோ ஜனநாயக குடியரசில் அமைந்துள்ள சிறைச்சாலையொன்றில் இருந்து குறைந்தது. ஆயிரத்து 300 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. கொங்கோவின் வடக்கு கிவ் மாகாணத்தின் பெனியில் உள்ள கொங்பாய் மத்திய சிறைச்சாலை மீது செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியளவில் இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதல் காரணமாகவே இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. கொங்பாய் மத்திய சிறைச்சாலை மீதும், அதற்கு பாதுகாப்பு அளிக்கும் இராணுவ முகாமின் மீதும் ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து சிறைச்சாலையில் சுமார் 100 பேர் மட்டுமே எஞ்சியிருந்தனர் என நகர மேயர் மொடெஸ்டே பக்வனமஹா சுட்காட்டியுள்ளார். (வ-இ)

## 196 நாள்களின் பின் பூமிக்கு திரும்பிய விண்வெளி வீரர்

வொஷிங்டன், ஒக்.23
பன்னாட்டு விண்வெளி நிலையத்தில் பணியாற்றி 196 நாட்களுக்குப் பின் பூமிக்குத் திரும்பியுள்ளார் நாசா விண்வெளி வீரரான கிறிஸ் கேஸிடி, பன்னாட்டு விண்வெளி நிலையத்தில் எக்ஸ்படிஷன் 63 என்ற பணித்திட்டத்தில் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய கிறிஸ் கேஸ்டி புவி ஈர்ப்பு விசை உள்ளிட்ட பல்வேறு அறிவியல் ஆய்வுகளில் ஈடுபட்டவர். கேஸிடி தற்போது விண்வெளி நிலையத்தில் மொத்தம் 378 நாட்கள் இருந்த விண் வெளி வீரர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.
அமெரிக்க விண்வெளி வீரர்களின் சாதனையில் இவர் 5ஆம் இடத்தைப் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)





## சன நெருக்கடியில் சிக்கி 15 ஆப்கானியர்கள் சாவு

காபூல், ஒக்.23
ஆப்கானிஸ்தானின் கிழக்கு நகரமான ஜலாலாபாத்தில் ஏற்பட்ட சன நெருக்கடியில் சிக்கி 15 பேர் உயிரிழந்துள்ளனர். ஜலாலாபாத்தில் அமைந்துள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்கு வெளியே விசாக்கு விண்ணப்பிக்க கூடியிருந்த ஆயிரக்கணக்கான நபர்களுக்கிடையே ஏற்பட்ட நெரிசல் காரணமாக இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. அதன்படி விசாவுக்கு விண்ணப்பிக்கத் தேவையான டோக்கன்களை சேகரிக்க சுமார் 3,000 ஆப்கானியர்கள் தூதரகத்துக்கு வெளியே திறந்த வெளியில் கூடியிருந்தனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. (வ-இ)






இ... ரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.